

# ஞானச்சுடர்

## தை மலர் 2002

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



உ
சிவமயம்

# குறள் வழி

" கேடில் விழுச்செல்வம் கல்வி ஒரு
மாடல்ல மற்றையவை. " [ வற்கு

பொருள்:

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வ மாவது கல்வி, அஃது அல்லாது மணியும் பொன்னும் செல்வமாகமாட்டா.



உ

# நற்சிந்தனை

## கிளிக்கண்ணி

ஆரறிவா ரென்றுசொல்லிக் — கிளியே
அதட்டுவான் அஞ்சாதே
பாரறிந்த பித்தனடி — கிளியே
பட்சமுடன் பணிந்துநட

கண்டார் நகைப்பரெனக் — கிளியே
கண்மணிநீ அஞ்சாதே
பண்டார வேடமடி — கிளியே
பாடிப் பணிந்திடடி

ஒண்டொடியே வந்திடடி — கிளியே
உள்வீதிக்கும் போவமடி
வண்டி வண்டி யாயிளநீர் — கிளியே
வந்து குவியுதடி

வளரும்......

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

சிவமயம்

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த

பரமாசார்ய ஸ்வாமிகள்

( இரண்டாவது குருமஹா சந்நிதானம் )

அவர்கள் வழங்கிய

# அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு !

சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப்பேரவையி னுடைய மாத வெளியீடான ஞானச்சுடர் தனது ஐந்தாவது வயதை அடைவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மனித வாழ்வை மேலோங்கச் செய்வது சமய நெறிகளாகும். இவற்றைப் பின்பற்றி வாழ்வது ஒவ்வொருவருடைய கடமையாகும். இதற்காகவே நம் சமயத்தில் புராண இதிகாசங்களும் வரலாற்று இதழ்களும் மாத வெளியீடுகளும் மலர்ந்து கொண்டிருக்கின்றன. இதனை மையமாக வைத்து சந்நிதி முருகனின் அருளால் இயங்கிவரும் சந்நிதியான் ஆச்சிர மம் சமய சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றது. இப்பணிக்கு மகுடம் வைத்தால் போல் ஒவ்வொரு மாதமும் குறித்த திகதியில் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக ஞானச்சுடர் சிந்தனையைத் தூண்டும் கருத்துக்களையும் சிந்தித்து செயற்படக்கூடிய கட்டுரை களையும் உலகெங்கிலும் வாழும் சைவ மக்களுக்கு பெரு விருந்தாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. மலரின் அமைப்பு அதில் வரும் செய்திகள் யாவும் சிறப்புடையது. வெளிநாடுகளில் வாழும் சைவத் தமிழ் மக்கள் சைவ வாழ்வு முறையை அறிந்து கொள்ள மிக ஆவலாக உள்ளனர். அவர்களின் சமய சமூகப்பணிக்கு இம்மலர் விருந்தாகஅமைந்துள்ளது. இம்மலரை சிறப்பாக வெளியிடும் பேரவை யினருக்கும் கட்டுரைகளை எழுதி வெளியிடும் அன்பர்களையும் வாழ்த்துகின்றோம். இம்மலர் தொடர்ந்து சிறப்பாக வெளிவந்து மக்களின் ஆன்மீகப் பசியை நிறைவு செய்ய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

'' என்றும் வேண்டும் இன்ப அன்பு ''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த

பரமாசார்ய சுவாமிகள்

உ

சிவமயம்

அருட்கவி சி. விநாசித்தம்பி M. A.

( ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் )

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துப்பா

வானச்சுடர்ச் சூரியன்போல் மக்களுக்கு
மனங்குளிரும் தெய்வீக நெறியுரைத்துத்
தானச்சுடர் பெருகும்அன்ன தானமாற்றி
தவம்பொங்கு சமயத்தின் மாண்புணர்த்தி
கானச்சுடர் அரங்கமைத்துக் கலைபரப்பிக்
கனத்தபணிப் பேரவையோர் வளர்க்கும் சோதி
ஞானச்சுட ரேஜயான் டகவைகொண்டு
ஞாலமெலாம் புகழ்படைத்தாய் வாழிவாழி.

ஃ ஃ ஃ

பாரார்சந் நிதியான் ஆச் சிரமச் சைவப்
பண்பாட்டு பேரவையார் வெளியிடும் சொற்
சீரார்ஞா னச்சுடரே சைவ மக்கள்
சிந்தனைத்தேன் சுவைத்தின்பப் பேறுகாண
தாரார்சந் நிதிவேலன் கருணையாலே
சான்றோர்கள் போற்றிடுசஞ் சிகையாய் நின்றாய்
தேரார் சந்நிதி மிளிரும் கால மெல்லாம்
செழிப்புயர்ந்து பணிபுரிந்து வாழி வாழி.

அருட்கவி சி. விநாசித்தம்பி M. A.
( நாகவரத நாராயணர் தேவஸ்தானம் )

உ

சிவமயம்

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

( சமாதான நீதிபதி, தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

அவர்கள் வழங்கிய

சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும்

'ஞானச்சுடர்' சஞ்சிகை

# வாழ்த்துரை

அன்னம் பாலிக்கும் அறப்பணியில் இன்று யாழ் குடாநாட்டில் முன்னின்று பணிபுரிவது சந்நிதியான் ஆச்சிரமம் ஆகும். 'அன்னக் கந்தன்' என்று அனைவராலும் போற்றப்படுபவன் சந்நிதிக்கந்தன் என்பதை யாவரும் அறிவர். பண்டிதர்களும், பாமரர்களும் அறிஞர் களும், அகதிகளும் ஒன்றாகச் சேரும் இடம் இதுவாகும். அத்தனை பேருக்கும் அன்னமிட்டு ஆதரிக்கும் பணியை ஆற்றிவருவது சந்நிதி யான் ஆச்சிரமம் ஆகும். இப்பணியில் முன்னின்று பணிபுரிபவர் ஆச்சிரம சுவாமி அவர்கள். இவர் சளைக்காதும் இளைக்காதும் பணிபுரிகின்ற சிறப்பை நான் நேரில் பார்த்து மகிழ்ந்து இருக்கிறேன். இவர் ஆற்றுகின்ற கூட்டுவழிபாடு அடியார்களின் உள்ளத்தை ஈர்த்து ஈர்த்து என்புருக்குவது. இத்தகைய தர்மப்பணியோடு 'ஞானச் சுடர்' என்னும் சஞ்சிகை வெளியிட்டு அறிவுப் பணியையும் ஆற்றி வருகின்றனர் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை. பண்பாட்டுப் பேரவையினர். எமது சமயம், கலை, பண்பாடு போன்றவற்றை 'ஞானச்சுடர்' சஞ்சிகை மூலம் பேணிக்காத்து அருட்பணி ஆற்றிவரு பவர்கள் இவர்கள். இத்தகைய சிறப்புகள் வாய்ந்த இச்சஞ்சிகையின் ஐந்தாவது ஆண்டு ஆரம்பவிழா நடைபெறுவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இவ் அறிவுக் களஞ்சியமான ஞானச்சுடர் எல்லோர் மத்தியிலும் ஞானம் என்னும் அறிவுச் சுடரை ஏற்றி வைக் கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஞானச்சுடர் மூலம் அறச்சிந் தனைகளை இந்த மண்ணில் வெளியிடுகிறார்கள் இவர்கள் இத் தகைய அருட்பணிகளை ஆற்றும் சந்நிதியான் ஆச்சிரமப் பணி களையும் அதனை முன்னின்று நடாத்தி வரும் சுவாமி அவர்களை யும் மற்றும் ஆச்சிரமத் தொண்டர்களையும் வாழ்த்துகிறேன். எனவே 'ஞானச்சுடர்' சஞ்சிகையை வாழ்த்தி சந்நிதியான் ஆச்சிரம பேரவையைப் போற்றி அமைகின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

( சமாதான நீதிபதி)

உ

சிவமயம்

( கௌரவ இந்து கலாச்சார அமைச்சர் )

திரு. தி. மகேஸ்வரன் அவர்களின்

# ஆசிச் செய்தி

வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயங்களில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமும் ஒன்றாகும். இந்த ஆலயத்தின் சூழலில் இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் சந்நிதியான் ஆச்சிரமமும் அதனுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையும் இன்று எமது சமயத்திற்கு ஆற்றிவருகின்ற பல்வேறு வகையான காத்திரமான தொண்டுகள் எம்அனைவரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றது.

இவர்கள் வெளியிட்டு வரும் ஞானச்சுடர் என்ற சமயம் சார்ந்த சஞ்சிகை வெளியீடு ஒரு மகத்தான செயற்பாடாகும்.

மக்களின் ஆத்மீக ஈடேற்றம் என்ற தூய்மையான நோக்கத்துடன் ஐந்தாவது ஆண்டில் காலடி வைக்கும் ஞானச்சுடர் சஞ்சிகைவெளியீடு தொடர்பாக எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்

சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இதனுடன் நெருக்கமான தொடர்பினை கொண்டுள்ளமையால் இவர்களது ஓய்வில்லாத தூய்மையான பணிகளை நான் நன்கு அறிவேன்.

இவர்களது தூய்மையான பணிகள் மேலும் சிறப்படைவதற்கு சந்நிதி முருகனின் திருப்பாதங்களைப் பணிகின்றேன்.

தி. மகேஸ்வரன்

( கௌரவ இந்து கலாச்சார அமைச்சர் )





# சந்நிதியான் ஆச்சிரம

## சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொண்டைமானாறு

ஸ்தாபிதம்: 27 - 09 - 1992

### போஷகர்கள்:

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய ஸ்வாமிகள்**
[ நல்லை ஆதீன முதல்வர் ]

சிவஸ்ரீ பண்டிதர் சைவப்புலவர்
**கை. நமசிவாயக்குருக்கள்**
[ சைவசமய ஆசிரிய ஆலோசகர் ]

**சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் *J. P.***
[ வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரதமகுரு ]

**பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள்**
[ வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் ]

### தலைவர்:

**சி. நாகலிங்கம்**
[ தொழிலதிபர் ]

### செயலாளர்:

**ந. அரியரத்தினம்**
[ அதிபர் யா/தொண்டைமானாறு, வீரகத்திப்பிள்ளை மகா வித். ]

### பொருளாளர்:

**செ. மோகனதாஸ்**
[ நிர்வாகி சந்நிதியான் ஆச்சிரமம்]

### உபதலைவர்:

**க. சிவக்கொழுந்து *J. P.***
[ உடுப்பிட்டி ]

### உபசெயலாளர்:

**பண்டிதர் க. முத்துவேலு**
[ இளை. ஆசிரியர் இமையாணன் ]

### உபபொருளாளர்:

**செ. நடராசா**
[ இடைக்காடு ]

### நிர்வாக சபை உறுப்பினர்கள்:

***A.* அரசபிள்ளை**
[ கல்வியங்காடு ]

**க. கந்தசாமி**
[ ஓய்வு பெற்ற தபாலதிபர், கரணவாய் ]

**க. அருள்லிங்கம்**
[ சங்கானை ]

**சி. நவரெத்தினம்**
[ ஓய்வு பெற்ற ஆசிரியர், கரணவாய் ]

**இசைமணி சி. துரைராசா**
[ கெருடாவில் ]

**சே. ரவீந்திரநாதன்**
[ உடுப்பிட்டி ]

**இ. புஸ்பநாதன்**
[ உரும்பிராய் ]

# சுடர் தரும் தகவல்

சமுதாய வாழ்க்கையில் ஒருதுறை மற்றத் துறைகளுடன் தொடர்பு படுவது இன்று, தவிர்க்கமுடியாத ஒரு விடயமாகும். சமயத்துடன் கலாச்சாரம் பண்பாடு என்பன தொடர்புபட்டுள்ளதை நாம் அறிவோம். அதே போன்று சமயத்துடன் விஞ்ஞானமும் தொடர்புபட்டுள்ளது. இந்து சமயத்தின் தத்துவங்கள் - சடங்குகள் எந்தளவிற்கு விஞ்ஞானத்துடன் தொடர்புபட்டிருக்கிறது என்பதை கவிஞர் கண்ணதாசன் உட்பட பலர் சிறப்பாக விளக்கியுள்ளனர்.

இதேபோன்று சமயத்திற்கும் அரசியலுக்கும்கூட தொடர்பிருக்கிறது. அதுமட்டுமன்றி, ஒரு நாட்டின் சகல துறைகளையும் தீர்மானிக்கும் முக்கிய விடயமாக அரசியலே விளங்குகின்றது. அரசியல் பிழைத்தால், நாட்டின் அனைத்து விடயங்களும் பாதிப்படையுமென்ற கோட்பாட்டை இன்று நடைமுறையில் பாமரமக்களும் விளங்கிக்கொண்டுள்ளனர். உண்மையில், ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி உட்பட அனைத்து விடயங்களின் முன்னேற்றத்திற்கு ஒரு முன்நிபந்தனையாக அமைவது அரசியலில் காணப்படும் அமைதி, உறுதி என்பனவேயாகும்.

அரசியலில் அமைதி, உறுதி என்பன காணப்பட்ட காலங்களிலேயே சமயமும் சிறப்புப்பெற்று விளங்கியுள்ளதை உலக வரலாறுகளும் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ்நாட்டில் 10-ஆம் 11-ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் சோழப் பேரரசு அரசியல் ரீதியாக வலுவுடையதாக இருந்தமையால்; சமயம் மட்டுமல்ல சமயத்துடன் இணைந்து கட்டிடம், சிற்பம் என்பனவும் வளர்ச்சியடைந்தன, தஞ்சைப் பெருங்கோயிலும் இக்காலத்திலேயே கட்டப்பட்டது. அதுமட்டுமன்றி, இலங்கை உட்பட கடல்கடந்த நாடுகளிலும் சைவம் பரப்பப்பட்டது.

இன்று இலங்கையில் காணப்படுகின்ற அரசியற் குழப்பமும் - அதனால் ஏற்பட்ட யுத்தச் சூழலும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சமய ரீதியாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களெல்லாம் நாம் எல்லோரும் அறிந்த விடயங்கள்.

இந்த நிலமைகள் மாற்றமடைந்து எமது சமயம் எதிர்நோக்கும் பல வகைப்பட்ட பிரச்சனைகளும் நீங்கி சுதந்திரத்திற்கு முன் வடக்குக் – கிழக்குப் பகுதிகளில் எவ்வாறு சமய நிலமைகள் காணப்பட்டதோ; அதே போன்ற முன்னேற்றமான சூழல் ஏற்பட பிரார்த்திப்போமாக.

உ

# "ஞானச்சுடர்"

## மார்கழி மாத வெளியீடு

### வெளியீட்டுரை:

மலருக்கான வெளியீட்டுரையை ஆசிரியர் செ. பரமேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்கள். இவர் தமது ஆரம்ப உரையில் ஆச்சிரமமும் பேரவையும் அன்னதானப்பணி, அறிவுப்பசியைத் தீர்த்தல், கலை கலாச்சாரத்தை மேம்படுத்துதல், போன்ற பணிகளை சுயநல மற்ற ரீதியில் மேற்கொண்டு வருவதனை எடுத்துக்காட்டினார்கள்.

மக்களிடையே சமய உணர்வையும் விழிப்புணர்வையும் தோற்றுவிப்பதற்கு ஞானச்சுடர் ஒரு முன் மாதிரியாக விளங்குவதைச் சுட்டிக் காட்டினார்கள். மேலும் நூலின் எளிமைத்தன்மை, ஒழுங்காக வெளியிடப்படும் பாங்கு, விளம்பரம் அற்ற தன்மை போன்ற சிறப்புக்களையும் சபையினருக்கு எடுத்துக்காட்டினார்கள்.

### மதிப்பீட்டுரை:

மலருக்கான மதிப்பீட்டுரையை காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் வழங்கினார்கள். ஞானச்சுடர் என்பது அறிவுச் சுடராக ஒளி வீசுகின்ற ஒரு நூலாக வெளிவந்து கொண்டிருப்பதை எடுத்துக் காட்டினார்கள்.

மேலும் ஞானச்சுடர் உலகில் அறிவையும், ஆத்மீகம் சார்ந்த அறிவையும் பரப்பிக்கொண்டிருக்கின்ற தன்மையையும் சுட்டிக்காட்டினார்கள். எமது ஆசைகளை அறுப்பதற்கு நாம் ஞானச்சுடர் மீது ஆசை வைத்து அதனைப் படிப்பதனூடாக எம்மை ஈடேற்ற முடியுமென்றும் குறிப்பிட்டார்கள்.

விளம்பரமற்ற சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடருக்கு சைவ மக்கள் எல்லோரும் தமது ஆதரவை நல்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக ஞானச்சுடரில் இடம் பெற்ற கட்டுரைகளை சுருக்கமாக மதிப்பீடு செய்து தனது உரையை நிறைவு செய்தார்கள்.

★★

# ஐந்தாவது வயதில்......

ஞானச்சுடர் எமது மண் வாசனையுடன் சமய சஞ்சிகையாக ஐந்தாவது வயதில் காலடி வைப்பதையிட்டு எமது மகிழ்ச்சியையும் திருப்தியையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

எமது பிரதேசம், எமது நாடு என்ற நிலையைக் கடந்து; பூகோளம் முழுவதிலும் ஞானச்சுடர் பரவலாக தனது ஒளியைப் பரப்பி ஆத்மீக ஈடேற்றத்திற்கு துணை செய்து கொண்டிருப்ப தனையும், இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதானதென நினைக்கின்றோம்.

ஆச்சிரமம், பேரவை என்பவற்றின் செயற்பாடுகளில் நேரடி யாக வந்து பங்கு கொள்ள முடியாத அன்பர்களும் இங்கே இடம் பெறும் விடயங்கள் பற்றி அறிந்து, தெரிந்து பயனடைய வேண்டு மென்பதும் ஞானச்சுடர் வெளியீட்டை நாம் மேற்கொள்வதற்கான ஒரு முக்கிய காரணமாகும். அந்த நோக்கமும் பெருமளவுக்கு நிறை வேறியுள்ளது என்பதை வாசகர்கள், ஆச்சிரமத்திற்கு அனுப்புகின்ற கடிதங்கள் மூலம் நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது.

எமது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, ஞானச்சுடர் பிர காசிப்பதற்கு ஆக்கங்களை வழங்கிக் கொண்டிருக்கும் சமயப் பெரியோர்களையும், அறிஞர் பெருமக்களையும் இந்தச் சந்தர்ப்பத் தில் நன்றியுடன் நினைவு கூர்ந்து அவர்களுக்கு எமது வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

விளம்பரம் எதுவுமின்றி முற்றிலும் ஆத்மீகம் சார்ந்ததாக வெளிவரும் ஞானச்சுடர், நான்கு வருடங்கள் வெற்றியுடன் வீறு நடை போட்டு ஐந்தாவது வருடத்திலும் காலடி வைக்கின்றதென் றால் அதற்கு வாசகர்கள் வழங்குகின்ற மகத்தான ஒத்துழைப்பே காரணமாகும். இந்தவகையில் எமது நன்றிக்கும் - வாழ்த்துக்கும் உரியவர்கள் வாசகர் பெருமக்களே.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலிலிருந்து அவனது சிறப்புக் களையும் - பெருமைகளையும் உள்ளடக்கி வெளிவருகின்ற இந்த நூல், ஆலயத்திற்கும் அடியவர்களுக்கும் ஒரு பாலமாக அமைந் துள்ளது என்றே கருதவேண்டும். ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகப்பெரு மானுடைய அருள் ஞானச்சுடருடன் தொடர்புடைய அன்பர்கள் அனைவருக்கும் கிடைப்பதாக.

ஞானச்சுடர் தொடர்ந்தும் ஒளியைப் பரப்புவதற்கு கருணை செய்யுமாறு, ஆற்றங்கரை வேலவனின் திருப் பாதங்களைப் பணிகின்றோம்.

**பேரவையின் சார்பில் செயலாளர்**

உ

# ஞானச்சுடர்

வெளியீடு — 2 சுடர் — 49

2002 தை

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| 21ஆம் நூற்றாண்டில் ஈழத்து இந்து...... | 1 - 3 |
| ஞானச்சுடரே உனது சேவை தொடரட்டும் | - 4 |
| அழுது துன்புறாமல் வாழ ஆன்மீகம் | 5 - 7 |
| வியக்க வைக்கும் அம்பாளின் அருள் | 8 - 12 |
| சக்தி வழிபாட்டின் சிறப்பு | 13 - 15 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் | 16 - 17 |
| ஆறுமுகப்பிரானும் ஆறும் | 18 - 21 |
| ஸ்ரீ முருக மந்திரம் | 22 - 25 |
| உலக உயிர்கள் உய்யும் நெறி | 26 - 29 |
| சுப்பிரமணிய சுவாமி | 30 - 31 |
| சைவத்திருமுறைகள் | 32 - 36 |
| அகவை ஐந்தினில் ஞானச்சுடர் | 37 - 38 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும் ....... | 39 - 42 |
| சந்நிதியான் | 43 - 47 |
| திருவாசக விழா | 48 - 49 |

அன்பளிப்பு: மலர் ஒன்று 30/- ரூபா
வருடச்சந்தா தபாற்செலவுடன் 385/- ரூபா
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையினர்.

அச்சுப்பதிப்பு: அச்சகம் சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு.

உ

# தை மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

திரு கு. கங்கைவேணியன்
( உரிமையாளர் வேணிகளஞ்சியம், யாழ்ப்பாணம். )

உரிமையாளர்
( ஸ்ரீ நதியா நகைமாடம் யாழ்ப்பாணம். )

திரு S. பத்மநாதன்
( முகாமையாளர், மக்கள்வங்கி யாழ்ப்பாணம். )

திருமதி யோ. சிவப்பிரகாசம்
முகாமையாளர், மக்கள்வங்கி யாழ்ப்பாணம். )

திரு ப. சண்முகநாத முதலி
( மக்கள்வங்கி, யாழ்ப்பாணம். )

திருமதி விஜயகுமார்
( மக்கள்வங்கி, யாழ்ப்பாணம். )

திரு S. சிவராஜ்
( தேசிய சேமிப்புவங்கி, யாழ்ப்பாணம். )

உரிமையாளர்
( V. M. K. நகை மாளிகை, சாவகச்சேரி. )

உரிமையாளர்
( சாரங்கா நகை மாடம், யாழ்ப்பாணம். )

உரிமையாளர்
( பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை. )

உரிமையாளர்
( கிருஷ்ணா ஸ்ரோர்ஸ், சங்கானை. )

உரிமையாளர்
( குபேரன் களஞ்சியம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். )

உரிமையாளர்
( லிங்கன் கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணம். )

உரிமையாளர்
( வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம். )

உரிமையாளர்
( துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய். )

திரு சி. தங்கவடிவேலு
( சிற்றி வெதுப்பகம் தும்பளை. )

திரு நா. குணரெட்ணம்
( புதிய யாழ் வைத்தியசாலை, ஆனைப்பந்தி. )

திரு ஆ. சுந்தரலிங்கம்
( பதவி நிலை உத்தியோகத்தர் அஞ்சல் திணைக்களம் யாழ். )

Dr. S. இராசலிங்கம்
( தோப்பு அச்சுவேலி. )

லயன் K. செல்வரெத்தினம் J. P
( ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி. )

திரு நா. கந்தப்பு
( தோப்பு, அச்சுவேலி. )

உரிமையாளர்
( கண்டி ஸ்ரோர்ஸ், அச்சுவேலி. )

திரு க. தர்மலிங்கம் J. P.
( நீர்வேலி. )

திரு பொன் நேசதுரை
( அரசடிவீதி, சங்கானை. )

திரு பூ. கீதசந்திரக்குருக்கள்
( சித்திர வேலாயுத ஆலயம், கோப்பாய். )

திரு க. சோமசேகரம்
( மகாராணி பிடவை அகம், யாழ்ப்பாணம். )

திரு மு. தர்மலிங்கம்
( " சிங்காரராசா வாசா " உடுப்பிட்டி. )

உரிமையாளர் திரு வே. கந்தையாபிள்ளை அன்சன்ஸ்
( 51, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். )

உரிமையாளர்
( மலாயன் கபே, யாழ்ப்பாணம். )

திரு S. ஞானரூபன்
( அஜந்தாஸ் பிடவை அகம், யாழ்ப்பாணம். )

திரு பா. இராசேந்திரம்
( கிராம உத்தியோகத்தர், கெருடாவில். )

திரு செ. மதியாபரணம்
( வளர்மதி பிடவை அகம் கே. கே. எஸ், வீதி, யாழ்ப்பாணம் )

திரு இ. துரைராசா
( முகாமையாளர் இலங்கை வங்கி, காங்கேசன் துறை. )

உரிமையாளர்
( புதிய நித்திய கல்யாணி நகைமாடம் கன்னாதிட்டி, யாழ். )

திரு இரா. ஸ்ரீநடராசா
( லிவ்கோ கல்வி மன்றம், உடுப்பிட்டி )

திரு நீ. சுப்பிரமணியம்
( கொள்வனவு உத்தியோகத்தர் ப. நோ. கூ. ச. உடுப். )

செல்வி தாட்சாயினி செல்வமாணிக்கம்
( நாவலடி, உடுப்பிட்டி. )

திரு. K. சிவகுருநாதன்
( பலாலி வீதி கந்தர் மடம், யாழ்ப்பாணம். )

திரு ஜே. பிரபாகரன் மாஸ்டர்
( சுப்பமார்க்கற் நெல்லியடி, கரவெட்டி. )

திரு. வே. இரத்தினசிங்கம்
( சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை. )

திரு. சி. கணேசலிங்கம்
( தமிழ்ப் பூங்கா, நெல்லியடி. )

திரு. செ. கமலநாதன் ( கமல் )
( கணபதி களஞ்சியம் வலவந்தோட்டம், கரணவாய். )

திரு. கி. அமிர்தலிங்கம்
( மக்கள் வங்கி, நெல்லியடி. )

உரிமையாளர்
( பெசன் ஹவுஸ் கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். )

உரிமையாளர்
( பெற்றா எசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம். )

வாசகர் போட்டிக்குரிய பரிசில்கள் மாசி மாத மலர் வெளியீட்டின் போது வழங்கப்படும்.

உ

# ஆதரவு நல்கும்
# அன்பர்களுக்கு..

ஆச்சிரமம் ஆற்றவேண்டியதும், ஆற்றிக்கொண்டிருப்பதுமான முக்கிய பணி நித்திய அன்னதானப் பணியாகும். இந்த அன்னதானப் பணிக்கு ஆதரவு வழங்குகின்ற அன்பர்கள் மிகவும் போற்றப்பட வேண்டியவர்களாவர்

எனது குருநாதர் 'மயில்வாகனம் சுவாமிகள்' காலத்திலிருந்தே தொடர்ந்தும் பல அன்பர்கள் அன்னதானப் பணிக்கான பங்களிப்பு ஆற்றி வருகின்றனர். அது மட்டுமன்றி இங்கே இடம் பெற்றுக்கொண்டிருக்கும் இந்த தூய்மையான அன்னதானப் பணியை மேலும், சிறப்பாக முன்னெடுப்பதற்கு உதவியாகப் பல அன்பர்கள் தாங்களாகவே முன்வந்து பல்வேறுவகையான உதவிகளை வழங்கிக் கொண்டிருப்பதும் எனக்கு உற்சாகத்தை அளிப்பதாகவுள்ளது இத்தகைய அன்பர்கள் அனைவரையும் இந்தச் சந்தர்ப்பத்தில்; நன்றியுடன் நினைவு கூருவது எனது கடமையாகும்.

காலத்தின் தேவைகருதித் தற்பொழுது ஆச்சிரமம் ஆற்றிவருகின்ற சமூகப் பணிகளும், அதிகரித்த வண்ணமே உள்ளன ஏழைச் சிறார்களுக்கான கல்விக்கான உதவிகள், மாணவர்களிடையே நடாத்தப்படும் போட்டிகளும் - பரிசளிப்புக்களும், வாராந்த வெள்ளி நிகழ்வுகள், வைகாசிப் பெருவிழா, திருவாசகவிழா வருடாந்த விழாக்கள் போன்ற பல்வேறு நிகழ்வுகளும்; திருப்தியாகவும் - சிறப்பாகவும் ஆச்சிரமத்தினாலும், பேரவையினாலும் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் மனமுவந்து ஆதரவும், உதவிகளும் வழங்கும் அன்பர்களும், நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

ஆச்சிரமத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒரு தனித்துவமான செயற்பாடாகும் இந்தவகையில், ஞானச்சுடருடன் தொடர்பாக ஒத்துழைப்பு வழங்கி வருகின்றவர்களும் பெருமதிப்பிற்குரியவர்களாவர்.

தற்பொழுது பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆச்சிரமத்தில் இலவச வைத்திய சேவையும், குறிப்பிட்டகால ஒழுங்கில் மகப்பேற்று வைத்திய நிபுணரின் சேவையும் வழங்கப்பட்டு வருகின்றன இத்தகைய சேவைகளுக்கு மனமுவந்து தொண்டு அடிப்படையில் இலவச சேவை வழங்கிக் கொண்டிருக்கும் Dr. S. யோகேஸ்வரதேவர், வைத்தியக் கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை அவர்கள், மகப்பேற்று வைத்திய நிபுணர் திருமதி G. பவானி ஆகியோரும் நன்றி கூறிப் பாராட்டப்பட வேண்டிய பெரியோர்களாவர்.

இவ்வகையான காரியங்கள் அனைத்தையும் ஒரு விதமான குறைவில்லா வகையில் நிறைவேற்றுவதற்குச் சந்நிதி வேலவனது அருளும் குருநாதரின் ஆசியும் தாம் காரணம் அவ்வகையில் இப்பணிகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கும் அனைத்து அன்பர்களுக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனது திருவருள் கிடைப்பதற்குப் பிரார்த்திக்கிறேன்.

குருசேவையில்
செ. மோகனதாஸ்

உ

# 21ஆம் நூற்றாண்டில் ஈழத்து இந்து சமயத்தவரிடையே ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றிய சிந்தனைக் கருத்துக்கள்

★ ஆறு. திருமுருகன் ★

உலக ஆன்மீக வரலாற்றில் உன்னதமான நிலையில் போற்றப்படுகின்ற மதம் இந்துமதம். ஆதி மதமென வரலாற்று ஆய்வாளர்களால் சிறப்பிக்கப்படும் பெருமை இந்து மதத்துக்குரிய சிறப்பம்சமாகும். தென்கிழக்காசிய நாடுகள் முழுவதும் செழிப்புற்று ஒரு காலத்தில் விளங்கிய இந்து மதம் இன்று பல சவால்களை எதிர் நோக்கி நிற்பதை பலரும் அறிவர்.

இந்து மதத்தின் பிறப்பிடமாக இந்தியாவை கொள்கின்ற மரபு உண்டு. ஆதிகாலம் முதல் ஈழத்திலும் இந்தியாவிலும் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்கின்ற பாரம்பரியம் நிலைத்திருந்துள்ளது எனினும் ஆறுவகைச் சமயங்கள் என இன்று கொள்ளப்படுகின்ற சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், சௌரம், கௌமாரம் என்ற மதப்பிரிவுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட நிலையில் இந்தியா முழுவதும் வேதத்தை மூலமாகக் கொண்டு சிறப்புற்றுள்ளது. ஈழத்தில் சிவவழிபாடு முதன்மை பெற்று விளங்கிய போதிலும் ஏனைய தெய்வங்களையும் சிவ சம்பந்தமான நிலையில் வழிபடும் வழக்கம் தொடர்ந்து வருகிறது. ஆதிமதமாகிய இந்து மதம் உலகலாவிய ரீதியில் பின் தோன்றிய மதங்கள் பரவிய வேகத்தில் பரவாவிட்டாலும் எக்காலத்திலும் அழியாநிலை பெற்ற மதமாக ஆழ்ந்து அகன்ற தத்துவங்களைக் கொண்ட மதமாகவிளங்குகின்றது. கிறீஸ்துவுக்கு முன் பல ஆயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட மதமென மேலைத்தேய ஆய்வாளர்களே இந்து மதத்தின் உண்மையை நிரூபித்துள்ளனர். இந் நிலையில் இந்து மதத்தை அழியவிடாது காப்பதில் மன்னர்கள், மகாஞானிகள், மக்கள் ஆரம்பகாலம் முதல் காத்துவந்தனர். இன்று வரை இந்து மதத்தை அழியவிடாது காப்பதில் இந்துக்கள் ஓரளவு அக்கறை கொண்டு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வாழ்வதில் தான் இன்பம்; உழைப்பதில் தான் வாழ்வு.

எந்தவொரு மதமும், எந்தவொரு மொழியும், எந்தவொரு இனமும் நிலைத்து வாழ்வதற்கு அவற்றைச் சார்ந்தவர்களின் அபிமானமும், காலத்திற் கொவ்வக்கூடிய வகையில் தம்மை இசைவாக்கிக் கொண்டவையே நிலை பெற்றன என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். அவ்வகையில் பாரம்பரிய மதமாகிய இந்துமதம் தன் அடிப்படைக் கொள்கைகளில் மாற்றமுறாது பழமையையும் புதுமையையும் இணைந்து வாழ்வாங்கு வாழ்ந்துள்ளது. அருவுமாய், உருவுமாய், அருவுருவுமாய் என்ற ஒழுங்கை அன்று மக்கள் அனுசரித்து வந்தனர். தேகசுகம் நல்லகுணம் நீண்ட ஆயுள், ஐஸ்வரியம், இறைநிலை என்ற நிலையில் மனிதர்கள் தம் வாழ்நாளை ஒழுங்குபடுத்துவதற்கு இந்து மதம் வழிகாட்டி இருந்தது. பிறவிகளைக் கடந்து இறைவனை அடைதலே இந்துக்களின் பிரதான குறிக்கோளாகும். பிறவியைக் கடந்து இறைவனை அடைவதற்கு இந்து மதக்கொள்கைகள் வழி காட்டியுள்ளது. இந்து மதங்களிடையே கடவுள் வழிபாட்டுக் கொள்கைகளில் இரு கொள்கைகள் பிரதான இடம் வகிக்கின்றன.

1. வேதாந்தக் கொள்கை.
2. சித்தாந்தக் கொள்கை.

இவற்றை விட இந்துமதத்தில் பல தனித்துவக் கொள்கைகள் எழுந்து அவற்றில் சில அமைதி பெற்றும் உள்ளது. பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவாகால வகையின என்ற தொல்காப்பியக் கூற்றுப்போல் இந்துக்களிடையே எத்தனையோ பழமையும், புதுமையும் தொடர்புபட்டமையினை வரலாறுகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக ஒரு சாரரிடம் ஆரம்ப காலத்தில் பலியிடல் வழிபாடு முக்கியத்துவம் பெற்று விளங்கியது எனினும் தூய வழிபாட்டில் உயிர்ப்பலியிடல் ஒவ்வாததர்மம் என பல சீர்திருத்தவாதிகள் எடுத்துரைத்து மக்களை நெறிப்படுத்தியுள்ளனர். கிராமிய பாமர மக்களிடையே அச்சத்தின் காரணமாக தனித்துவம் பெற்ற வழிபாட்டில் பலியிடலும் ஒன்று எனினும் பெரும்பாலான இந்துக்கள் ஆன்மதத்துவத்தை உணர்ந்து பலியிடல் வழிபாட்டினை தவறெனக்கருதி பலரை ஆற்றுப்படுத்தினர்.

இந்துக்களின் வாழ்க்கை முறையில் காணப்பட்ட தவறுகளை அவ்வப்போது சில மகான்கள் தோன்றி நல்வழியூடாக நெறிப்படுத்தினர். இன்று உலகளாவிய ரீதியில் பரவி இருக்கும் இந்துமதம் பல சீர்திருத்தங்களை சந்தித்தது. சுமார் 120 வருடங்களுக்கு முன்பு பாரத தேசத்தில் மிகவும் பெருமையான சில மரபுகளை சிலர் பின்பற்றினர்.

கடவுளின் மேல் வைக்கும் சிந்தனையே தியானமாகும்.

1. பாலியற் திருமணம்
( சிறுபராயத்தில் குறிப்பாக 12 வயதில் திருமண நிச்சயார்த்தம் செய்தல் )
2. கணவனை இழந்த இந்து விதவைப் பெண்கள் கட்டாயமாக உடன் கட்டை ஏறல்.
3. கணவனை இழந்த இந்து விதவைப் பெண்ணிற்கு முடிவழித்து வெண்சேலை அணிவித்தல்.
4. உயிர்ப்பலியிடல்.
5. தெய்வ சன்னிதானங்களில் வழிபடுவதற்கு சாதி பேதங்களைக் கடைப்பிடித்தல்.
6. சமூக உறவாடலில் கடுமையான வர்ணப்பாகுபாடுகளைக் கடைப்பிடித்தல்.
7. இறைவழிபாட்டை சில மூட நம்பிக்கைகளோடு செய்தல்.
8. அதர்வவேதத்திலுள்ள சில முறைகளை கடைப்பிடித்து தீமைக்கு அவற்றைப் பயன்படுத்த முனைதல்.
( செய்வினை, சூனியம், மருத்தீடு )

மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஊறிப்போயிருந்த இந்துப் பாமர மக்களை இந்தியாவில் சீர்திருத்துவதற்காக பல பெரியவர்கள் தம் வாழ்நாளை அர்ப்பணித்தனர். ராஜாராம், மோகன்ராய் தயானந்தசரஸ்வதி, மீராபாய், சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், மகாத்மாகாந்தி போன்ற மகான்கள் எடுத்த முயற்சி மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்கு ஒவ்வாத கலாச்சாரங்களிலிருந்து இந்துக்களை நவீன சீர்திருத்தத்திற்கு மாற்றம் பெற வைத்தது. சீர்திருத்தவாதிகள் எடுத்த முயற்சியினால் இந்தியாவில் உடன்கட்டை ஏறுதல் தடைசட்டம் பிரித்தானிய அரசினால் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்துக்களிடையே காணப்பட்ட சாதி பேதங்களை ஒழிப்பதற்காக மகாத்மா காந்தி அடிகள் இந்துச் சீர்திருத்தபணியாகவே தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை உருவாக்கினர்.

[வளரும் ...

கயிற்றை வெட்டி விட்டு முடிச்சுப் போட்டால் அந்த முடிச்சு கடைசி வரை கண்ணுக்குத் தெரிந்து கொண்டே இருக்கும். ஒரு முறை பகை வந்து மீண்டும் எவ்வளவு நெருங்கிப்பழகினாலும் அந்தப் பகை மனதில் நீண்டு கொண்டே இருக்கும்.

உண்மையான அமைதி நீதியின் கனியாகும்.

உ

ஓம் முருகா

# ஞானச்சுடரே!
# உனது சேவை தொடரட்டும்

/ கா. கணேசதாசன் *J. P.* /

ஞானச்சுடரே! உனது சேவை தொடரட்டும் – இந்த
வையகம் நலம் பெறத் தொடரட்டும்
பொங்கு தமிழர் வாழ்வு சிறப்புற - சைவ
மங்கா நெறிகளைப் பரப்பிவிடு.

அறநெறி ஆக்கங்கள் தாங்கி எல்லா
அகிலமும் சீர்பெற்று சிறந்துவாழ
அகத்தினில் ஞானஒளி ஏற்றி - எமக்கு
ஆன்மீக வாழ்வைக் காட்டிவிடு.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ – மக்கள்
மனங்களில் மாசகல வேண்டும்
மாண்புடன் மனிதர் வாழ்வதற்கு - மனதில்
பக்திச் சுடரை ஏற்றிவிடு.

நாலாண்டு காலமாய் சந்நிதியான் – அருளாலே
சீரான மலராகத் திகழ்கின்ற சுடரே
நம்தமிழர் வாழ்வை வளமாக்க - வல்ல
ஐந்தாம் வயதிலும் நற்சேவை புரிந்துவிடு.

வாழ்க உலகில் சமாதானம் - அறம்
அன்பு, வாய்மை, சைவநெறி
ஆழ்வாய் உலகில் அன்பு மதம் – சுடரே
இங்கு அறவாழ்வைப் பரப்பிவிடு.

பதவியும் அந்தஸ்தும் நிரந்தரமில்லாதவை.

உ

சர்வம் சிவமயம்

# அழுது துன்புறாமல் வாழ ஆன்மீகம் வழிகாட்டும்

சி. சி. வரதராசா

மனித வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் தேவை. நோக்க மில்லாது வாழ்வது அர்த்தமற்ற வாழ்க்கையாகும். வாழ்வுக்கு அர்த்தம் காட்டிநிற்பது சமய வாழ்வாகும். ஆன்மீக வாழ்வில் இந்த அரிய மானுடப் பிறவியைப் பயன்படுத்தி நன்மை பெற வேண்டும் என இந்து மதத் தத்துவங்கள் இயம்புகின்றன. பிறக்கும் போதே அழுது கொண்டு பிறக்கும் மனிதன் அப்பிறவி முழுவதும் அழுது துன்புறாது இருக்க ஆன்மீகம் வழிகாட்டுகிறது.

நாம் நல்ல வண்ணம் வாழ்வதற்கு ஞானக்குழந்தையாகிய ஞானசம்பந்தர் நல்வழி காட்டியுள்ளார். அவர் சீர்காழியில் உள்ள திருத்தோணிபுரத்திற் சிவனையும் சக்தியையும் கண்ணாரக் கண்டு பாடிய திருமுறையில்:

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணி னல்லாளோடும் பெருந்தகை இருந்ததே!

என்று வாழும் மனிதனுக்கு வாழ்வாங்கு வாழ்வியற் கருத்துக் கூறிப்பாடியுள்ளார்.

அற்புதமான கருத்தாழமுள்ள இப்பாடலின் பொருளை நாம் அனைவரும் உணர வேண்டும். அதாவது மண்ணில் வாழ்பவன் நல்ல வண்ணம் வாழ அவன் மனத்தில் எண்ணும் எண்ணங்கள் நல்லனவாய் அமைய வேண்டும். நல்லதைத் தினமும் எண்ணுபவனே நல்ல சக்தியை அடைவான் என்கிறார் திருஞானசம்பந்தர். எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும் திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும் என்கிறார் சுப்பிரமணிய பாரதி.

மனிதன் தனது எண்ணங்களில் தினமும் அழுக்காறு, அவா, வெகுளி போன்ற அவலங்

கடமை என்னுடையது பலன் ஆண்டவனுடையது.

களை இருத்துவானாகில் துன்ப கதியே அவன் வாழ்வாகி விடும். "வாழ் வாழ விடு" "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்ற பரந்த மனிதாபிமான நோக்கமின்றி நான் வாழ வேண்டும், எனது குடும்பம் வாழ வேண்டும், எனக்கு எல்லாச் செல்வமும் வரவேண்டும், மற்றவன் எக்கேடு கெட்டாலும் அதைப்பற்றி எனக்கென்ன? மற்றவனை விட எனக்கே அந்தஸ்து வரவேண்டும். இதுவே எம்மிற் பலரது இறைவழிபாட்டின் முக்கியமாக அமைந்துள்ளது. இதை எப்படிச் சமய வழிபாடு என்பது?

எங்கள் சமய வாழ்வு சமய வாழ்வாக இருக்கின்றதா? என்பது சிந்திக்க வேண்டியது. உண்பது, உடுப்பது, உறங்குவது, உல்லாசமாக வாழ்வது சமய வாழ்வா? ஆடையணிகலன்கள், ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவது இல்லை அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடல்ல. தன்னலமறுப்புச் சமயத்தின் அடிப்படைக் கொள்கை பொது நலம் ஓம்புதல் சமயத்தின் உன்னதக் கொள்கை.

இறைபக்தியுடையவன் இனியவற்றையே எதிர்பார்க்க வேண்டும். நல்லதையே எதிர்பார்க்கும் மனிதன் தன் கண்ணுக்கு நல்ல காட்சியை ஏற்படுத்த வேண்டும். தினமும் ஆண்டவனின் அழகுப் பொலிவை ஆலயங்களுக்குச் சென்று காண்போமானால் மனம் இன்புறும். புன்னகையுடன் மலர் மாலைகள் நிறைந்து அருள் பாலிக்கும் வண்ணம் இருக்கும். ஆண்டவனை அனுதினமும் சென்று நாம் உள்ளன்போடு ஆலயங்களில் வழிபட வேண்டும். இதனை விட்டு அகோரமான, அவலமான காட்சிகளைப் பார்ப்போமானால் அகோரமான எண்ணங்களே எமக்குள் உருவாகும்.

திருஞானசம்பந்தர், சீர்காழி இறைவன் சக்தியோடு இருந்து அருள்பாலிக்கும் தன்மையை; '**பெண்ணினல்லாளோடு பெருந்தகை இருந்ததே**'' எனப் பாட்டை நிறைவு செய்கிறார். இரக்கமுள்ள உலகத்திற்குத் தாயாக விளங்கித் தயவு, அன்பு, பாசம், நேசம், பரிவு காட்டுகின்ற பார்வதியோடு இறைவன் இருக்கின்ற காட்சி ஆனந்தமான காட்சி

ஒவ்வொருவர் உள்ளத்திலும் நல்ல எண்ணம், நல்ல சிந்தனை, நல்ல நோக்கம், நல்ல தத்துவம் நல்ல செயற்பாடுகள் தானாக உருவாகவேண்டும்.

தெய்வீக சிந்தனை மனத்தில் ஏற்பட வேண்டுமானால், நாம் நல்லதைப் பார்க்கவேண்டும். நல்ல காட்சியைத்தேடி மனிதன் வாழ முயலவேண்டும்.

எச்சரிக்கப்படுவதை விட எச்சரிக்கை செய்வதே மேல்.

இறைவனுடைய ஆலயங்களில் என்றும் நாம் நல்லவற்றையே காணலாம். இறைவனது அருட் கோலத்தைக்கண்டு அகமகிழ்ந்து வாழலாம். இதனாலன்றோ நமது மூதாட்டி ''**ஆலயம் தொழு வது சாலவும் நன்று**'' எனக் கூறி யுள்ளார்.

அன்பையும், பரிவையும், மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டு நாம் மனநிம்மதி—சந் தோஷமாகவாழ ஆன்மீகம் வழி காட்டும்.

நமது பிட்டன் ஆகியோர் ஓரளவுக்காவது ஆத்மீக சக்தி யுடனிருந்தனர். ஆத்மா பல மடைவதற்குப் பெருமதிமிக்க காலத்தை ஒதுக்கவேண்டும். அப் போது உள்ளே இருக்கும் தெய் வீக நற்பண்புகளை நாம் நடை முறைப்படுத்தக் கூடியதாக ஆன்மீகம் வழிகாட்டும்.

'' என்றும் வேண்டும் இன்ப அன்பு''
'' எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க''

## எது நிஜமானது?

ஒவ்வொருவரும் தத்தமது சமயத்தைப் போற்றுவது, பின் பற்றுவது அதனைப்பரப்புவது எல்லாம் அவர்களது பிறப்புக்கடமையாகும். பொதுவாக ஒரு தாயின் அன்பைத் தான் பிள்ளை நன்கு உணர்ந்து கொள்ளுகின்றது. அன்பு என்பதற்கு அங்கே இருந்துதான் விளக்கம் சொல்ல முற் படுகிறது.

இதே போன்றுதான் ஒவ்வொருவரும் தத்தமது சமயத்தை பின்பற்றுவதும் தத்தமது சமயத்தின் சிறப்பை வெளிப் படுத்துவதுமே பொருத்தமானதும் வரவேற்கத்தக்கதுமாகும் வேறு சமயத்தை பின்பற்றுவது, நன்கு தெரியாத அதனைத் தெரிந்தது போல் காட்டுவதும் போலியானதும் பொருத்த மற்ற விடயங்களுமாகும்.

மலர் வெளியீட்டின் பொழுது
**விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
**அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து**

சிந்தனையில்லாத மனிதன் பிணத்திற்குச் சமமாவான்

உ



# வியக்க வைக்கும் அம்பாளின் அருள்

:::::::::::::

கண. ஜீவகாருண்யம் பீ. ஏ.

**பெ**ற்ற தாய் போன்று எம்மைக்காப்பவள் அன்னை ஆதி பராசக்தி. அவளை அன்புடன் நினைத்து வழிபடுவோர்க்கு எந்த வரமானாலும் கொடுப்பவள் அவள் அதனால் அம்பிகையை வழிபடுவோர்க்கு எந்தவித துன்பமும் அணுகாது. சீர்காழியிலே தீர்த்தக் கேணியில் நீராடச் சென்ற தந்தையைக் காணாது '' அம்மையே அப்பா '' என்று அழுத திருஞானசம்பந்தர் என்ற குழந்தைக்கு ஞானப்பாலை அருந்தக் கொடுத்தவள். அதனால் ஞானம் பெற்ற திருஞானசம்பந்தர் திருஞானசம்பந்த நாயனார் ஆனார்.

அம்பிகை அருள் பெற்ற வாய்பேச முடியாத '' மூகர் '' என்பவர் ஸ்ரீ பஞ்சமுகதுதி என்ற நூலை இயற்றி அம்பிகையைத் துதித்தார். சுய அறிவே அற்ற மூடனான காளிதாசன் என்பவனுக்கு அருள்காட்சி கொடுத்து அகரமுதல எழுத்தெல்லாம் அறியவைத்து தன் மீது சியாமளா சாஸ்த்திரம் என்ற அரிய நூலை பாட வைத்தவள். அம்பிகை அருள் பெற்ற ஆதிசங்கரர் '' சவுந்தரியலகிரி '' என்ற நூலை இயற்றி அம்பிகையின் அருளில் மூழ்கினார்.

ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சர் தற்பொழுது கொல்கத்தா என்று அழைக்கப்படுகின்ற கல்கத்தாவிலுள்ள தட்சணேஸ்வரர் கோயிலிலுள்ள பவதாரணியை தஞ்சமென்று அடைந்து அவள் அருளில் திளைத்தார். அந்தச் சமயத்தில் இந்து சமயமும், தத்துவமும் கீழ் நிலை அடைந்து வரும் நிலையில் இருந்தது. அப்போது இந்துமத தத்துவங்களை உலகுக்கு எடுத்துக் கூறி அதன் மகிமைகளை தெளிவாக்க அம்பிகைக்கு ஒரு தேவை இருந்தது. அப்போது நரேந்திரன் என்ற இளைஞன் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரை அடைந்து கடவு

ளைக் காட்டுங்கள் என்று வேண்டினான். அம்பிகை மூலம் தனக்கு கிடைத்த அரிய பொக்கிசம் அந்த இளைஞன் என்பதை ஞானக்கண்ணால் உணர்ந்த ஸ்ரீஇராம கிருஷ்ண பரமஹம்சர் அந்த இளைஞனின் தலையில் தனது கையை வைத்து ஆசீர்வதித்தவுடன் அவன் தன் நிலையை இழந்து குருவே சரணமென்று தஞ்சமடைந்தான். தன்னை மறந்தான். தன் குடும்பத்தை மறந்தான். அம்பிகையின் கோயில் உட்பிரகாரத்தில் உறையும் பவதாரணியைக் கண்டவுடன் உலக இன்பங்கள் துன்பங்கள், ஆசாபாசங்கள் எல்லாவற்றையும் மறந்தான். 1893-ம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற உலகசமய விழாவில் பங்குபற்றி அமெரிக்க மக்களை ''சகோதர சகோதரிகளே'' என்று விழித்து இந்து சமயத்தின் பெருமைகளையும் தத்துவங்களையும் உலகத்துக்கு எடுத்துக் கூறினார் நரேந்திரன் என்ற சுவாமி விவேகானந்தர். அன்று தொடக்கம் இந்து சமயத்தின் பெருமைகள் உலகத்தின் கண்களுக்கு இருளைப்போக்கி அருளைக் கொடுத்தன. சுவாமி விவேகானந்தர் பேசஎழுந்ததும் ஒரு ஒளி ஒன்று அவர்முன் தோன்றுமாம். அந்தஒளி சுவாமி ஸ்ரீ இராமகிருஷ்ணர் மூலம் அம்பிகையின் அருளால் கிடைத்த ஒளி தான்.

அம்பாளின் அருள் சக்தி இல்லாவிட்டால் உலகமே இயங்காது. ''அதனால் சக்தி இருந்தால் செய். அல்லது சிவனே என்று இரு'' என்றார்கள். முருகனுக்கு போரில் வெல்ல சக்தி வேலைக் கொடுத்தவள் அம்பிகைதான். காசியில் விசாலாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும், சமயபுரம் மாரியம்மனாகவும், நயினையில் நாகபூசணி அம்மனாகவும், மாத்தளையில் முத்துமாரி அம்மனாகவும், தெல்லிப்பளையில் துர்க்கை அம்மனாகவும் விளங்குபவள் அவளே.

வாய் பேச முடியாது இருந்த குமரகுருபர சுவாமிகளுக்கு சிறுமியாக வந்து காட்சி கொடுத்து பேசவைத்து அவர் மூலம் சகல கலா வல்லி மாலை பாடவைத்தவளும் அவளே.

சோழவள நாட்டில் சரித்திரத்திலும், சாஸ்திரத்திலும், சமய நிலையிலும் விளங்கப்பெற்ற திருக்கடவூர் அந்தணர் மரபிலே அபிராமிப் பட்டர் அவதரித்தார். இவருடைய முன்னோர்கள் அபிராபி உடனான அமுதகடேசப் பெருமானிடத்து நீங்காத அன்பு பூண்டவர்கள். அதனால் இவருக்கு அபிராமிப்பட்டர் என்ற பெயர் சூட்டினார்கள். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன் அபிராமிப்பட்டர் தம்குலதெய்வ

நல்லவனின் புன்முறுவல் உள்ளத்திலிருந்து வருகிறது.

மான அபிராமி அன்னையின் மேல் ஆழ்ந்த அன்பு கொண்டு தியானயோகத்துள் திளைத்து பராகாச வெளியில் பராசக்தியைச் செவ்வொளியாகக் கண்டு சிவானந்தத் தேன் பருகிதன் வசமற்றுத் தாய் வசமான சேயானார்.

இவர் பார்க்கும் திசை தோறும் திரிபுரையாள் திரு மேனி கண்டு அபிராமி அன்னை அருள் என்னும் பேரின்ப வெள்ளத்துள் திளைத்திருந்தார். பக்குவம் பெற்ற உள்ளத்துடன் அன்னையின் சந்நிதியில் நின்று அவள் அருள் வெள்ளத்தில் திளைத்து தியானத்தில் மூழ்கி இந்த உலகத்தையே மறந்து நீண்ட நெடுநேரம் இருப்பார். இவர் இவ்வாறு இருக்கும் பொழுது யாரையும் கருதவும் இலட்சியம் செய்யவும் மாட்டார். இவருடைய அனுபவ நிலையை உணராதசிலர் இவர் ஏதோ தேவதையை உபாசித்து அந்தணர்க்கு மாறுபாடான ஆசாரங்களை மேற்கொண்டு பித்துப் பிடித்து அலைகிறார் என்று ஏசத் தொடங்கினர்.

ஒரு முறை தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னன் தை அமாவாசைக்கு கடலாடக் காவிரிப்பூம் பட்டிணம் வந்தான். கடவூர் நாதனைத் தரிசிக்க எண்ணித் திருக்கோயிலுள் சென்றான் அம்பிகையின் அருளில் தன்னை மறந்து இருந்த அபிராமிப்பட்டரைக் கண்டு அவருடன் கதைக்க விரும்பினான். அம்பிகையின் அருள் ஒளி வீசும் திருமேனியுடன் காணப்பட்ட அவருடன் கதைக்க அருகில் சென்றான். அபிராமிப்பட்டரோ அரசன் வரவை அறியவில்லை அபிராமி அன்னையின் அருள் அமுதத்தில் திளைத்துத் தியானத்தில் ஈடுபட்டு ஆனந்தக் களிப்பில் மிதந்த வண்ணம் இருந்தார். அங்கு நின்ற அந்தணர்களை நோக்கி ''வேந்தனையும் துரும்பாக எண்ணி வீற்றிருக்கும் இவர் யார்'' என்று கேட்டான். அதற்கு அவர்கள் ''இவர் வாம மார்க்கத்தவர் மது மயக்கத்தால் மயங்கி இருக்கிறார். கிட்டத்தட்ட பித்தரைப் போன்றவர். வேத நெறி கடந்து பரிவார சக்தியாகிய ஒரு தேவதையை வழிபடுகின்றார்'' என்று கூறினர் ஆனால் இதனை அரசன் நம்பவில்லை. அபிராமிப்பட்டரோடு பேச விரும்பிய அரசன் ''ஐயா இன்று என்ன திதி? எவ்வளவு நாழிகை இருக்கிறது'' என்று கேட்டான். அம்பிகையின் அருளில் மூழ்கியிருந்த அபிராமிப்பட்டர் ''இன்று பௌர்ணமி'' என்றார். இப்போது தான் அந்தணர்கள் கூறியது உண்மை என்று அரசன் உணர்ந்தான். பட்டரே இன்று அமாவாசை, பூர்ணிமை என்று சொன்னீர். நீர் சொன்னது போல் நிலவு வரவில்லையானால் அரச ஆணை உம்மைக் கட்டுப் படுத்தும். என்று கூறிச் சென்

○ வஞ்சகனின் புன்முறுவல் உதட்டிலிருந்தே வருகிறது. ○

றான். யோக நிலையில் இருந்து மீண்டபட்டர் உண்மை உணர்ந்து தவறாகப் பௌர்ணமி என்று சொல்லி விட்டோமே என்று எண்ணி வருந்தினார். உடனே அரச தண்டனையை அடைவதை விட நாம் வழிபடு கடவுளாகிய அன்னையை நிலவு தோன்றுமாறு வேண்டுவோம். அவ்வாறு தோன்றாவிடின் உயிரை விடுவோம்'' என்று உறுதிபூண்டார்.

ஒரு தீக்குழியை உண்டாக்கினார். நூறுகால்களோடு கூடிய ஒற்றைவார் உறியொன்றை அமைத்து, தான் அந்த உறியின் மேலடுக்கில் அமர்ந்து அபிராமி அன்னையை அந்தாதி பாடத் தொடங்கினார் ஒவ்வொரு பாட்டு முடியும் போதும் உறியின் அடுக்கு ஒன்றைச்சேமித்துக் கொண்டே சென்றார். அருட்பிரவாகத்தில் அந்தாதிப் பாடல்கள் அம்பாளின் பெருமையையும் அருளையும் உலகியலின் சிறுமையையும் பளிச்சிட்டு பண்ணிசைத்தது

பாட்டும் எழுபத்தி எட்டாயிற்று காலையும் மாலை ஆகிவிட்டது. உலகம் இருண்டு விட்டது பட்டர் மனதில் தெளிந்த ஞானம் பிறந்தது. ஆதலால் எழுபத்திஒன்பதாம் பாடலில் '' விழிக்கே அருளுண்டு '' என்று ஆவேசமும் உணர்ச்சியும் அருளும் பொங்கப் பாடினார்.

இப்பாடல் கேட்டதேவி பராசக்தி தன் இடக்காது தோட்டினை வலக்கையால் வாங்கி வான வீதியில் வீசினாள். என்ன அதிசயம் - அத்தோடு நிலவும் வந்தது யோகநித்திரையில் ஆழ்ந்திருந்த பட்டரை அம்பாள் எழுப்பி ' நிலவைப்பார் மகனே ' என்றாள் பட்டர் வான வீதியில் முழுநிலவைக் கண்டு அம்பாளின் கருணை மழையில் நனைந்தார். அபிராமிதேவி அன்பனே பாடல் தொகுதி குறையையும் நிறைவு செய்து முதலும் கடையும் கூட்டி முடித்து இப்பாமாலையை எனக்குச் சூட்டுக '' என்று அருளினாள்.

அமாவாசை நாளில் முழு நிலவு தோன்றியதைக் கண்ட சரபோஜி மன்னன் பட்டரைத் தேடி ஓடி வந்து அவர் பாதங்களிலே வீழ்ந்து மன்னிப்புக் கேட்டான். பட்டர் '' உன்னுடைய செயலால்தான் அடியேன் என் அன்னையின் அருள் பெற்றுச் சிறப்படைந்தேன் '' என்றார். தன்னை அன்புடன் வழிபடும் அடியாராகிய அபிராமிப் பட்டருக்கு அமாவாசை நாளில் பௌர்ணமியை உதிக்கச் செய்தவள் அம்பாள். இப்படிப்பட்ட பெருமைகள் பொருந்திய அம்பாளை நவராத்திரி நாட்களில் விரதமிருந்து வழிபட்டால் அவள் அருள் பெற்றிடலாம்.

இதனைத் தான் '' மகாகவி பாரதி எங்கெங்கு காணினும்

சக்தியடா '' என்று பாடினார். இந்த வகையிலே அம்பிகையை வழிபடும் அடியார்கள் பெற்ற நற்பேறுகளைப் பார்த்தோம். மீண்டும் பாரதியார் கூறுவது போல்.

சக்தி சக்தி சக்தி என்றே சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் வந்தால் இரண்டு கூறு
சக்தி சில சோதனைகள் செய்தால் - அவள்
தன்னருளென்றே மனது தேறு - என்பதற்கிணங்க

அம்பிகையை நாள்தோறும் வணங்கி அவள் அருள் பெற்று வாழ்வோமாக.

'ஞானச்சுடர்'' சந்தாதாரர்களுக்கு

## அன்பான வேண்டுகோள்

**மேற்படி 2001-ம் ஆண்டிற்குரிய சந்தாப்பணத்தை செலுத்தி எமது ஆத்மபூர்வமான பணிகளுக்கு ஆதரவை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

காசுக்கட்டளை:

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு

காசோலை:

செ. மோகனதாஸ்
நடைமுறைக்கணக்கு பி 7481
இலங்கை வங்கி,
பருத்தித்துறை

**மேலும் ஆச்சிரமப் பணிகளுக்கு உதவி புரிய விரும்புவோர் மேலே குறிப்பிட்ட வண்ணம் தொடர்பு கொள்ளவும்.**

இவ்வண்ணம்
பேரவையினர்

ஆர்வம் உண்டேல் ஆற்றல் வளரும்.

''உள்ளத்தனையது உயர்வு''

# சக்தி வழிபாட்டின் சிறப்பு

( செல்வி க. சசிலேகா )

செயற்கரிய செயல்கள் ஆற்றி இவ் வையகத்தைப் பரிபாலிக்கும் சக்திக்கு அம்பிகை, அம்பாள், பவானி, உமை, சாமுண்டி, பகவதி, காளி, உருத்திராணி, சாம்பவி, சங்கரி, மாலினி எனப்பல பிற பெயர்கள் வழங்கப்படுகின்றன. இதனையே:



'' நாயகி நான்முகி நாராயணி கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்று
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே ''

என்ற அபிராமி அந்தாதிப் பாடல் விளக்குகின்றது. தமிழர் தம் போர்த் தெய்வமாகக் கொண்ட கொற்றவையுஞ் சக்தியே; எனப் பழையகாலந் தொட்டுக் கூறப்பட்டு வருகின்றது. சிவ பக்தர்கள் சிவ வழிபாட்டுடன் சக்தி வழிபாட்டிற்கும் தமது சமயவாழ்வில் முக்கிய இடம் அளித்துள்ளனர். சிவன் கோவில்களிலே சிவனையும், உமையையும் ஒன்றாகவைத்து வழிபடுவதும், சக்திக்குத் தனியாகச் சந்நிதானம் அமைத்து அம்மன் என வழிபடுவதும் ஊர்கள் தோறும் அம்பாளுக்குத் தனியாகக் கோவிலெடுத்து வழிபடுவதும் சைவசமய மரபாகும்.

சிவசக்தி பலவகையான ரூபங்களிலே எழுந்தருளி பக்தர்களின் குறைகளையெல்லாம் களைகின்ற பெருஞ் சுடராகத் திகழ்ந்து; இவ் வையகத்தையும் பரிபாலிக்கின்றாள். இச்சாசக்தி லக்சுமியாக, கிரியாசக்தி - பார்வதியாக, ஞானசக்தி - சரஸ்வதியாக, பிரம்மரூபாசக்தி - படைக்கும்கடவுளாக, கோவிந்தரூபிணி சக்தி காக்கும்கடவுளாக, ருத்ர

நான் சிந்திக்கிறேன், அதுவே என் வாழ்வு.

ரூபாசக்தி — ஆணவத்தை அழிக்கும் கடவுளாக, ஈஸ்வரி— மறைத்தலாக, சதாசிவா — அருளலாக; இப்படிப் படைத்தல், காத்தல், அழித்தல் போன்ற ஐந்தொழிலுக்கும் காரணகர்த்தாவாகவும் இருக்கின்றாள் அன்னை பராசக்தி. மற்றும் உள்ள ஏழு சக்திகள், சர்வலோகத்தையும் பரிபாலனம் செய்ய எழுந்தனர். அவர்கள் முறையே மகேஸ்வரி, நாராயணி, கௌமாரி, இந்திராணி, காளி, அபிராமி, வராகி இவையும் ஆதிபராசக்தியின் அம்சங்களே. இவைதவிர, நவசக்திகளுமுண்டு நவசக்திகளான அன்னை ஜகதீஸ்வரி பின்வரும் வடிவங்களை ஏற்கிறாள். அவையாவன மனோன்மணி, சர்வபூத்தமணி, பலப்பிரதமணி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டைவாமை என்பனவாகும்.

பாட்டிலும் சாப்பாட்டிலும் இச்சக்தியே இருக்கிறாள். வாழ்விலும் தாழ்விலும் அவளே பரிபாலிக்கின்றாள். அவளே அன்னைபராசக்தி. எல்லாச் சக்திகளுக்கும் தலைவி அவளே. எல்லாமானுட இயங்கும் தன்மைக்கும் இயக்கம் அவளே. கல்விக்கும், கலைகளுக்கும் அதிதேவதை சரஸ்வதி கல்வியும், கலைகளும் உள்ளத்திற்கு இன்பம் அளிப்பவை. அழகுணர்ச்சியுடன் கூடியவை. வாழ்க்கை என்பதும் ஒரு கலையே.

'' ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்ப ளிங்கு வாரா திடர் ''

என்று பாடியுள்ளார் கவிச்சக்கரவர்த்தி மகாகவி கம்பர். ஏட்டுப் படிப்புக்கு மாத்திரமன்றி உழவுத்தொழில், கைத்தொழில் முதலிய எல்லாவற்றுக்கும் அருள் செய்பவள் கலைமகள். அதனாலேயே கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்களும்.

'' நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொளிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே ''

என்று பாடினார்.

'' வெள்ளைக் கலை யுடுத்து
வெள்ளைப் பணி பூண்டு — வெள்ளை
கமலத்தில் வீற் றிருப்பாள் — வெள்ளை
அரியாசனத்தில் அரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய் ''

கடவுளின் சட்டம் ஒருவனுக்குத் தீங்கு செய்யாது.

என்று கம்பரால் பாடப் பட்ட அந்தக்கலைமகளைப் பாரதியார் போற்றும்முறை சாலச் சிறந்ததாகும். செஞ்சொற்கவி இயற்றும் கலைவாணர் கருத்திலும் உள்ளொளி வாய்ந்த உரவோர் மனத்திலும் உலகினுக்கு ஒளி நெறிகாட்டும் உயரிய மறையிலும் கலைமகள் மகிழ்ந்துறைகின்றாள். இன்னும் இன்னிசை வீணையை மலர்கரத்திலே ஏந்திய கலைமகள் மக்கள் பேசும் மழலை மொழியிலும் மாதர் இசைக்கும் மதுரப் பாட்டிலும், கீதம்பாடும் குயிலின் குரலிலும், சிறையாடும் மடைக்கிளியின் செந்நாவிலும் அமர்ந்திருக்கின்றாள். அன்றியும்; மாடகூடங்களை அழகுசெய்யும் ஓவியங்களிலும், கோயில்களிலமைந்த சீரிய சிற்பங்களிலும் கலைமகள் விளங்குகின்றாள். எனவே, செவியினைக் கவரும் இயற் கவியும் - இன்னிசையும், கண்ணினைக் கவரும் ஓவியமும் - சிற்பமும் அறிவுத்தெய்வம் உறையும் இடங்களாகும். இதனையே:

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின் பங்குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்திலிருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின்றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறுங்
கருணை வாசகத்துட் பொருளாவாள்
மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையிலுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங்கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரங்கோபுரங் கோயில்
ஈதனைத்தின் எழிலிடையுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள்.

என்ற பாடலினூடாகத் தெரிய வைக்கிறார் பாரதியார்.

[வளரும் ...

# ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன்
## திருத்தல புராணம்

○ சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள் ○

ஆடுகிற மயில்கண்டார் அடியார் கூட்டம்
அஞ்சலிக்கும் நெறிகண்டார் ஐயன் தன்னைப்
பாடுகிற விதங்கண்டார் பக்திப் பூசை
பண்ணுகிற முறைகண்டார் பயிலு ங்கங்கை
ஓடுகிற பொழில்கண்டார் உயர்ந்த குன்றில்
ஒளிவீசும் வேல்கண்டார் ஒண்டி ரைக்குள்
நாடுகிற பொருள்கண்டார் ஞானம் கண்டார்
நயங்கண்டார் கதிர்காமர் நடங்கண் டாரே. 72

ஓங்கார வடிவேலே உயர்ந்த வேலா
உத்தமியாள் தருவேலா உச்சி வேலா
தீங்கான வசுரர்குலம் தேய்த்த வேலா
செவ்வேலா ஆறுபடை திகழும் வேலா
பூங்காவ னப்புனத்திற் பொலிந்த வேலா
புகழ்வேலா மலைதுளைத்த புனித வேலா
பாங்கான முச்சங்கம் படைத்த வேலா
பயில்கதிர மலைவேலா போற்றி போற்றி. 73

அற்புதனே அருமறையா றங்கம் தந்த
ஆதியனே சோதியனே அருணை மேவும்
கற்பகனே காஞ்சியில்வாழ் கருணை வேலா
கலைமலர்ந்து விளைந்தசுகக் கனியே தேனே
சிற்பரனே நான்முகனைச் சிறையி லிட்ட
சிங்காரா பகிரண்டஞ் சிருஷ்டி செய்யும்
தற்பரனே சண்முகனே சாமி நாதா
சரவணப வானந்தா போற்றி போற்றி. 74

சிந்தனா சக்தியினாற் காண வொண்ணாத்
திருமறையின் சிகரமே தேடு மன்பர்
பந்தனா வினை கழுவிப் பக்தி யூறும்
பயன்காட்டும் புண்ணியனே பழத்துக் காக
வந்துமா மயிலேறி மண்ட லங்கள்
வாழ்வுபெற வைத்தவனே மாணிக் கப்பேர்
தந்தமா நதிக்கதிரைக் கந்தா போற்றி
சரவணனே போற்றிஎனத் ததும்பி நின்றான். 75

○ தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயங்காதே. ○

உ

# திருத்தல புராணம்

## கதிர்காமத்தில் கதிர்காமர் கண்டவை.

72] கதிர்காமத்தில் மயில் ஆடுவதைக் கண்டார். அடியார் கூட்டங்கள் தம்மைமறந்து முருகனை வழிபடும் காட்சியைக் கண்டார் முருகனைப் பாடுகின்ற தன்மையை உள்ளுணர்வினாற்கண்டார் பக்தியோடு, அடியவர்கள் பூசிக்கும் முறைமை கண்டார் பெருமான் பக்கத்திலே பாய்கின்ற மாணிக்கக்கங்கையும் அதனையடுத்த சோலைகளையும் கண்டார் உயரமான கதிரமலை உச்சியிலே நாடிவரும் அன்பருக்குக் கருணை செய்யும் திருவடி வேலைக்கண்டார். கோயிலுள் இடப்பட்டிருக்கும் திரைக்குள்ளே, பரம் பொருள் தத்துவாதீதனாய் இருக்கும் அழகைக்கண்டார். அப்பொருளின் அருட்பார்வையால் ஞானோதயம் பெற்றார். அதனால் தன்னைமறந்தார் தன்னாமம் கெட்டார் ஆனந்தக் கூத்தாடினார்.

## முருகனை வேண்டுதல்

73] ஓம் என்ற பிரணவ வடிவாய் அமைந்த வேலாயுதரே தேவர்கள் உயர்ந்த பொருளாக மதித்து வழிபாடு செய்யும் வேலாயுதத்தை உடையவரே, உத்தமி பராசக்தி எம்புதல்வா வாழி என்று தந்த வேலையுடையவரே, கதிரமலை உச்சியில் (அடியார்களின் சகஸ்ரபீடமாகிய சிரசில்) நின்று செயற்படும் வேலையுடையவரே, என்றும் பிரகாசம் நீங்காத சிறந்த வேலையுடையவரே, ஆறுபடை வீடுகளில் வாழும் வேலவரே, வள்ளி நாச்சியாரின் பொருட்டுத் தினைப்புனம் சென்ற வேலவரே. வேதாகமங்களால் புகழ்படைத்த வேலவரே கிரவுஞ்ச மலையைத் துளைத்த வேலவரே. கதிர்காமத் திருந்து வந்த வேலவரே வணக்கம் வணக்கம்.

74] வாக்கு மனாதீதம் கடந்த அற்புத வடிவானவரே, வேதங்கள், அவற்றின் ஆறு அங்கங்கள், உலகமெல்லாம் விளங்கவைத்த ஆதி பரம் பொருளே, சோதியாகி, அருணாசலத்தில் - நினைத்த எல்லாம் கொடுக்கும் கற்பகமாய் நிற்பவனே, காஞ்சி மாவடியில் வாழ்பவரே, கலைகளும் கலைகளின் பயனுமாய் அடியார்க்குச் சுகம் கொடுக்கும் கனியாய்த் தேனாய் விளங்கும் கருணாமூர்த்தியே, சிற்பரானந்தமூர்த்தியே, பிரமாவைச் சிறையிட்டுப் படைப்புத் தொழிலைச் செய்தவரே, ஆறுமுகனே, சிவனுக்கு உபதேசித்த சுவாமிநாதனே, சரவணபவ என்ற ஆறெழுத்து மந்திர சொரூபனே வணக்கம் வணக்கம்.

75] சிந்தனைக்கடங்காத - வேதக்காட்சிக்கும் உபநிடதத் துச்சிக்கும் அப்பாற்பட்ட ஞானமலையே, விரும்பித் தேடிவருமன்பரின் மும்மலப்பந்த வினைகளை நீக்கி, பக்தி வெள்ளத்தில் திளைக்கவைக்கும் புண்ணியனே, ஒரு மாங்கனியைக் காரணமாகக் காட்டி. உலகமெல்லாம் சுற்றிவந்து. அம் மண்டலங்களெல்லாம் சுகவாழ்வு பெற வைத்தவரே, மாணிக்கநதியாயும் கதிரமலைக் கந்தனே சரவணபவனே வணக்கம் வணக்கம் என அன்பு ததும்பி உள்ளமுருகிய நிலையில் கதிர்காமர் தன்னை மறந்துநின்றார்.

பேச்சை விட மௌனமே சிறந்தது.

உ

# ஆறுமுகப்பிரானும் ஆறும்

ஸ்ரீ சிவ. சண்முகவடிவேல் ஸ்ரீ

**ஆ**று என்ற பெயர்ச் சொல் இருவகைப் பொருள் கொண்டது. எண்கள் வரிசையில் 6 இலக்கத்தைச் சுட்டுவது! நதியைக் குறிக்கும் போது வழிச் செலவு என்னும் பொருள் கொள்ளும். முகம் ஆறுடைய முருகப்பெருமானுக்கும் ஆறு இலக்கத்துக்கும் மிக நெருங்கிய பொருத்தம் உண்டு. அதே போல இலக்கம் ஆறோடு தொடர்பு கொண்டவை உலகில் அனேகம் உண்டு.



முருகப்பெருமானோடு தொடர்பு பட்ட ஆற்றை முதலில் அறிவோம். திருமந்திரம் அதைச் சிறப்பாக வலியுறுத்தும். சிவபிரான் முருகன் ஆனதற்கு ஆறு பொறிகள் காரணம் என்னும்.

''எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தையின் முன்னே சண்முகம் தோன்றலால்
கந்த சுவாமி கலந்தங் கிருத்தலால்
மைந்தன் இவனென்று மாட்டிக்கொள் வீரே. (1026)

சிவனிடத்து ஆறுபொறிகளாகத் தந்தையின் திருமுன்னர் ஆறுமுகம் தோன்றியது. கந்தனாக அங்கு இறைவன் எழுந்தருளினன். அதனால் சிவனுக்கு முருகன் என்று அறிந்து கொள்ளுங்கள். அது திருமூலர் திருவாக்கு.

அதே போல ஆறுபடைவீடு என்பதற்குப் பலரும் பலவிதமான பொருள் ஏற்பர்.

''அவன் வானோர் வணங்குவில் தானைத்தலைவன், தேவசேனாதிபதி. ஆதலின் அவன் எழுந்தருளும் இடங்கள் படை

உன்னுடைய பகைவன் உன் இதயத்திலே உள்ளான்.

வீடுகள் ஆயின'' – இவை போலப் பலபடப் பொருள் விரிப்பர் பலரும்.

''ஆறுபடை வீடு'' என்பதில் ஆறு இலக்கத்தை உணர்த்துவதாகக் கருத்திற்கொண்டு படை வீடு என்பதற்குப் படை கொண்ட வீடுகள் என விரித்து, முருகன் ஆறுபடை கொண்ட வீடுகள் என நிறைவாக்கி விடுவார்கள்.

திருமுருகாற்றுப் படையை மறந்து விடுவதால் வரும் பொருள் மயக்கம் அது.

திரு + முருகு + ஆறு + படை என்பதே திருமுருகாற்றுப் படை ஆனது.

ஆறு - வழி. படை - படுத்தல்- ஆறுபடை - வழிப்படுத்தல் என்று முன்னரே கண்டோம். எனவே ஆறுபடை வீடு என்பதற்கு முருகனிடத்தில் அடியவனை வழிப்படுத்திய வீடுகள் எனப் பொருள் கோடலே சாலச் சிறந்தது. திருமுருகாற்றுப் படைக்கு மாறுபடாததும்ஆகும்.

முருகனிடத்தில் வழிப்படுத்திய – ஆற்றுப்படுத்திய வீடுகள் எவை? என்ற வினா எழுகின்ற போது அவை இவையாகும் என்று திருமுருகாற்றுப்படையே வெளிப்படுத்தும்.

ஆறுபடைவீடு முருகனிடத்தில் ஆற்றுப்படுத்திய வீடுகள் என்னும் பொருள் அமைதி போற்றுவதற்கு உரியது.

இனி, ஆறுமுகப் பிரானோடு இணைந்த ஆறுபற்றி அறிவோம்.

**முருகப்பெருமான்:**

அக்கினிப்பொறிகள் — ஆறு. திருமுகங்கள் — ஆறு
மந்திர எழுத்து — ஆறு, ஆதாரம் ஆறு
குண்டம் குலாவிய கோடு — ஆறு, வழிப்படுத்திய வீடுகள் - ஆறு

**போற்றி ஆறு:**

மூவிரு முகங்கள் - போற்றி முகம் பொழிகருணை - போற்றி
ஈராறு தோள் - போற்றி மலரடி - போற்றி
சேவலும் மயிலும் - போற்றி திருக்கை வேல் - போற்றி

**வாழ்த்து ஆறு:**

வான்முகில் வழாது பெய்க, மலிவளஞ் சுரக்க,
மன்னன் கோன்முறை அரசு செய்க, குறைவிலாது உயிர்கள் வாழ்க,
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க.

**சோதிப்பிழம்பின் அருட்செயல் ஆறு:**

அருவம், உருவம், அனாதி, பல, ஒன்று, பிரமம்.

**வழிகாட்டல் ஆறு:**

புன்னெறி விலக்கல், நன்னெறி நிறுத்தல், நவையறு காட்சி வழங்கல், அடியனாக்குதல், இருவினை விலக்கல், அடிமை கொள்ளுதல்

**வழிப்படுத்திய வீடுகள் ஆறு;**

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவிநன்குடி, திருவேகரம், குன்றுதோறாடல், பழர்முதிர்சோலை.

**ஆறோடு இணைந்த ஏனைய சில:**

அந்தணர் தொழில் ஆறு; ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல்.

அரசர் தொழில் ஆறு: படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்

வைசியர் தொழில் ஆறு: ஓதல், வேட்டல், வேளாண்மை, வாணிகம், பசுக்காத்தல், உழவு.

நாலாம் வருணத்தவர் தொழில் ஆறு: பசுக்காத்தல், பொருளீட்டல், பயிரிடல், புராணாதிகள் ஓதல், ஈதல், அந்தணர்க்கு அனுகூலமாதல்.

சக்கரவர்த்தியர் ஆறு: அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுச்சன், புரூரவா, கார்த்தவீரியன்.

வேதாங்கம் ஆறு: சிட்டை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதம், சோதிடம்.

உட்பகை ஆறு: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்

சுவை ஆறு: தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு, கைப்பு.

சமயம் ஆறு: சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம்.

புறச்சமயம் ஆறு: உலோகாயதம், பௌத்தம், ஆறாகதம், மீமாஞ்சம், மாயாவாதம் பாஞ்சராத்திரம்.

நாட்டுச்சிறப்பு ஆறு; செல்வம், விளைவு, பல்வளம், செவ்கோண்மை, நோயின்மை, குறும்பின்மை.

அத்துவா ஆறு: மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை.

ஆதாரம் ஆறு; மூலாதாரம், சுவாதிட்டாணம், மணிபூரகம், விசுத்தி, ஆஞ்ஞை, பிரமரந்திரம்.

பொருள் ஈட்டும் துறையிலே தூய்மை வேண்டும்.

ஆறு: ஆறோடு தொடர்பினால் ஆறு, உற்பத்தி - மலை - கலத்தல் – கடல், வழிக்கொள்ளல் நான்கு நிலம்.

எழுத்து ஆறு: சரவணபவ.

கார்த்திகை மாதர்: ஆறு

நக்கீரனார் 'அதா அன்று' - என்ற தனிச்சொல்லை அடிக்கடி திருமுருகாற்றுப் படையில் பாவித்துக் கொள்வார். அதா அன்று - அதுவன்றி. அடியவனைத் திருப்பரங்குன்றத்திற்கு ஆற்றுப்படுத்திய பின்னர் அதா அன்று என்பார். அங்கே மாத்திரம் தான் முருகன் அருள் பெறலாம் என்று எண்ணாதே என்பவே அதாஅன்று - உட்கருத்து இங்கேயும் அருள் பெறலாம் என அடுத்த தலத்திற்கு ஆற்றுப்படுத்துவார்.

## கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களது

பிறந்த நாளை ஒட்டிய கவிதை

## "பூத்திட வைத்த புராதனி"

சிவமயச் சைவத் தமிழொடு தர்மம்
சிறப்புற வளர்க்கும் முதல்வி,
சீரிய பணியில் தம்மை முழுதாக்கும்
சிவத்தமிழ் அன்னை வாழியவே
நவமய மானஇவ் வுலகினில் சைவம்
நனிசிறந் தோங்க வைத்து
நாளைய சந்ததிக் கேற்ற வகையிலே
நல்லதோ ராலயம் பலிதமுடன்
புவனியில் சைவத் தமிழாய் வகமும்
பூத்திட வைத்த புராதனி
போன பிறப்பினில் செய்த பலாபலன்
புண்ணிய மாக்கிடச் செய்திடவே
அவனியில் தங்கம் மாவெனு மன்னை
ஆக்கிய பேறுக்கு நிகருண்டோ?
அகவை ஏழ்பதி னொன்றினி லெடுக்கும்
அன்னையின் பிறந்த நாள்வெல்க.

— கே. எஸ். சிவஞானராஜா

ஒன்றைப் பலவாக்குவது பகையின் குணம்.

உ

# ஶ்ரீ முருக மந்திரம்

## கூறா உலகம் குளிர்வித்தவனே

/ சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் /



ஒரு மனிதன் தனது வாழ்விற் பெறும் செல்வங்கள் அனைத்திலும் அழியாத செல்வமாகத்திகழ்வது கல்விச்செல்வமே ஆகும். வெயிலில் வேகாதது, நெருப்பில் எரியாதது, வெள்ளத்தால் அள்ளுப்படாதது, கள்வராற் களவெடுக்க முடியாதது, கல்விச் செல்வமே ஆகும். கல்வியைப் பெற்றவனுக்கு இருப்பது மாத்திரமே கண் ஆகும். மற்றவர்களுடைய முகத்தில் இருப்பது கண் அல்ல வெறும் புண் ஆகும் என்பதைக் "கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது. பிச்சை எடுத்தேனும் நாம் கற்க வேண்டும் என்பதைப் "பிச்சை புகினும் கற்கை நன்றே" எனப்புறநானூறும் செப்புகிறது. ஒருவன் தான் கற்ற கல்வியைப் பிறருக்கும் உதவக் கூடியதாகப் பயன்படுத்தல் வேண்டும். தானங்களில் மிகவும் உயர்ந்த தானம் கல்வித்தானமே ஆகும். சிலர் தம்மிடம் உள்ள அறிவையும் ஞானத்தையும் பிறருக்குக் கொடுக்காமல் தம்முடனேயே அந்த வித்தைகளை மறைத்து வைத்துக்கொள்வார்கள் அல்லது தம்மால் வழங்கப்படும் அறிவு

அத்தனைக்கும் விலை பேசுவார்கள். இவ்வாறு தம்மிடம் உள்ள அறிவை மறைத்து வைத்தமையால் கலைகள் பல அவர்களோடு மறைந்து அழிந்தே போய் விட்டன.

நாமறிந்த கலைகளைப் பிறருக்குப் போதிப்பது ஞான தானமாகும். அன்னதானம் மூன்று மணித்தியால நேரத்தில் ஜீரணித்து விடும். ஞான தானம் பிறவி தோறும் பின்சென்று உதவும். ஆதலால் ஞானம் உள்ளவர்கள் அனைவரும் அறிவுத் தானம் வழங்கத் தயாராக இருக்க வேண்டும். முருகப்பெருமான் ஞான பண்டிதனாகத் திகழ்கிறார். "சரவணபவ" மந்திரத்தை இடையறாது தியானிக்கும் முருக பக்தர்களுக்குச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வை இகவாழ்வில் அளிப்பதோடு "தகைமை, சிவஞான முத்தியோடு பரகதியையும் ஞான பண்டிதன் வழங்குவான்" என அருணகிரியார் தனது சந்தத் தமிழாகிய திருப்புகழிற் குறிப்பிடுகிறார். ஞான குருவைச் சற்குரு என்று அழைக்கும் வழக்கம் இந்து சமய மரபில் உண்டு. அருணகிரியார் அநுபூதியில் முருகனைக்குரவர் என அழைக்கிறார் தாம் கற்ற கல்வியைப் பிறருக்கு எடுத்துக்கூறப் பின்வாங்கும் கயவர்களின் பின் செல்லாமல் உண்மைப் பொருளைத் தான் அறிவதற்கு முருகப்பெருமான் அருள் புரிய வேண்டுமென அவருடைய பாதங்களைப் பணிந்து வேண்டுகின்றார். சற்குருநாதரே! குமரக் கடவுளே! வச்சிராயுதமேந்தியவரே! தெய்வயானையின் கணவரே! அடியார்க்குச் சிவ யோகத்தை அருள் புரிபவரே, நான் கல்வியை வழங்குவதில் உலோப குணமுடையாரிடம் சென்று இரக்காமல் உண்மைப் பொருளைத் தனக்கு அறியத்தர வேண்டும் என்று முருகப்பெருமானிடம் இரப்பதைப் பின் வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

கரவாகிய கல்வியுளார் கடைசென்
றிரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ
குரவா, குமரா, குலசாயுத, குஞ்
சரவா, சிவயோக தயாபரனே

இறைவன் எல்லா உயிர்கட்கும் அம்மையும் அப்பனுமாக இருந்து அருள் புரிகின்றான். "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே" என மணிவாசகப் பெருமான் இறைவனை அம்மையும் அப்பனுமாகப் போற்றுவதைத் தெய்வ வாசகமாகிய திருவாசகத்திற் காணலாம். உடம்புக்கு வரும் துன்பங்களை நாம் முயற்சி செய்தால் தீர்த்

துக் கொள்ளலாம். பசியை உணவாலும் தாகத்தைக் குளிர்ந்த நீராலும் தீர்த்துக் கொள்ளலாம் ஆனால், மனக்கவலையை அறிவின் முதிர்ச்சியாலும், அறிவு வடிவாகிய ஆண்டவனின் திருவருளினாலும் மட்டுமே தீர்த்துக் கொள்ள முடியும். உடம்பில் வரும் துன்பங்களைக் காயக்கிலேசம் என்றும் மனத்தின் துன்பங்களைப் பந்திக்கிலேசம் என்றும் அருணகிரியார் கந்தரலங்காரத்திற் குறிப்பிடுகிறார். உடம்பின் உறுப்புக்கள் அனைத்தின் செயற்பாட்டிற்கும் ஆதாரமாக இருப்பது மனமே ஆகும். எண்ணங்கள் விளைகின்ற இடமாகிய மனத்தில் மாசுக்கள் படியவிடக் கூடாது மனத்தில் மாசு படிந்துவிட்டால் வாக்கில் தடுமாற்றம் ஏற்பட்டுவிடும் ''உள்ளத்தில் உண்மை ஒளிஉண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்றே மகாகவி பாரதியாரும் குறிப்பிடுகிறார் இறைவனைச் சிந்திக்கச் சிந்திக்க ஏனைய சிந்தனைகள் நீங்கிவிடும். வினைகளால் விளையும் துன்பங்கள் நீங்கினால் பேரின்பம் ஊற்றெடுக்கும். சிந்தனையைச் சிவன்பால் திருப்பவேண்டும் என்பதைச் '' சிந்தனை நின்தனக் காக்கி''. என மணிவாசகப் பெருமான் திருவாசகத்திற் குறிப்பிடுகிறார். இறைவனுடைய திருக்கோயிலில் நின்று சேவித்தால் எல்லாவினைகளும் நீங்கிவிடும் உலகங்களையெல்லாம் காத்தருள் புரிகின்ற இறைவனின் திருவடியை உடம்பால் வணங்குதல் வேண்டும். இறைவனுடைய அருட்குணங்களில் ஒன்றையாவது கூறி வாயார வாழ்த்த வேண்டும்.

மனத்தாற் செய்த பாவங்கள் சிந்திப்பதால் நீங்கும். காயத்தாற் செய்த பாவங்கள் வந்திப்பதால் நீங்கும். வாக்காற் செய்த பாவங்கள் வாழ்த்துவதால் நீங்கும் மயில்வாகனனாகிய முருகப் பெருமானைச் சந்தித்தவருக்கு இயமனுடைய சந்திப்பு உண்டாக மாட்டாது நீர்க்குமிழி போலத் தோன்றி மறையும் நிலையில்லாத உலகவாழ்வையே நிலையானது என நினைந்து நாம் நாள் தோறும் தடுமாறுகிறோம் இறைவனுடைய திருவடிப்பேறு ஒன்றே உண்மையான இன்பம் என்பதை நினைத்து அவனை வாழ்த்தி வணங்க வேண்டும் என்பதைப் பின்வரும் கந்தரலங்காரப்பாடல் விளக்குகிறது.

சிந்திக்கிலேனின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேனொன்றும் வாழ்த்துகிலேன் மயில்வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே.

நல்ல மனச்சாட்சிதான் கடவுளின் குரல்.

ஒளி நிறைந்த வேலாயுதத்தைத் திருக்கரத்திலே தாங்கி நிற்கின்ற கந்தக்கடவுளே, உமையம்மையின் திருக்குமாரரே குமாரமூர்த்தியே, வேதங்களுக்குத் தலைவரே, நீர் தான் எங்களுக்குத் தாயும் தந்தையுமாக நின்று அருள் புரிகின்றீர். எங்களுடைய மனக்கவலை அனைத்தையும் மாற்றி ஆட்கொண்டருள் செய்யவேண்டும் என அருணகிரியார் முருகப்பெருமானை வேண்டி நிற்பதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தா குலமானவை தீர்த்தெனையாள்
கந்தா, கதிர்வேலவனே, உமையாள்
மைந்தா, குமரா, மறைநாயகனே.

[ வளரும்......

## நற்கதி அடைவதற்கு ......

நாம் இப்போது நான்கு விதங்களில் பாபம் செய்கிறோம். உடம்பால் பல கெட்ட காரியம், வாயால் பிறர் மனதைப் புண்படுத்தல், மனதால் கெட்ட நினைவுகள், பணத்தினால் செய்கிற பாவத்தைச் சொல்லவே வேண்டாம். எந்த நான்கினால் பாபத்தைச் செய்தோமோ அந்த நான்காலும் புண்ணியம் செய்யப்பழக வேண்டும் அத்துடன் ஆணவமும் பெருமையும் எங்களிடம் வளர்ந்து விட்டால் அதன்பின் ஏற்படும் ஆசைகளுக்கு அளவேயில்லை. ஆசைகள் தோன்றத் தோன்ற நாம் கடவுள் பக்கம் திரும்பமுடியாத அளவிற்கு, அவரைப் பார்க்கமுடியாத அளவிற்கு எங்கள் கவனம் சிதறி விடும். நாம்இறைவன் பக்கம் திரும்பும்போது தான் எம்மால் இறைவனைப்பார்க்க முடியும். அவன் புகழைப் பேசமுடியும் அந்நிலைக்கு நாம் நம்மை ஆட்படுத்தும் போது இறையருள் பூரணமாகக்கிட்டும். அதன் பலனாக நாம் நற்கதி அடைவோம். இதனை நாம் எல்லோரும் சிந்திப்போமாக.

உ

# உலக உயிர்கள் உய்யும் நெறி

க. சிவசங்கரநாதன்

உலகம் உய்யும் நெறி இது வென்றும் மனிதன் வாழும் நெறி இதுவென்றும் வையத்தில் வற்புறுத்திச் சென்ற சான்றோர் பலராவர் ஊழிபெயரினும் தாம் பெயராத் தன்மையுடைய அச்சான்றோர்கள் காட்டிய நற் பாதையில் மக்கள் செல்வதால் தான் உலகம் வாழ்ந்து வருகின் றது. அத்தகைய தவமுடைய சான்றோருள் ஒருவர் திருநாவுக் கரசர் ஆவார் தம்தொண்டின் சிறப்பினாலே தமிழகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்திய பெரியவர் இவராவார். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வர் இவர்பிறந்த பதி திருவாமூர் என்பதாகும் இப்பதியினைத் தெய்வப்புலமைச் சேக்கிழார் பெருமான் சைவநெறித் தவமேமும் பாலிக்குந் தன்மையி னால் தெய்வநெறிச் சிவம் பெருக்குந் திருவாமூர் என்று பாராட்டியிருக்கிறார் அத்திருத் திருத்தலத்தில் அலகில் கலைத் துறை தழைப்ப, அருந்தவத் தோர் நெறிவாழ, உலகில் வரும் இருள் நீங்கி ஒளிவிளங்கு கதிர்போல் திருநாவுக்கரசர் திருவவதாரஞ் செய்ததாக மேலும் அவர் போற்றுவார். பரமன் பதம் பாடிப் பாடித் துதித்தே, புகழ் கொண்டவர் திருநாவுக்கரசர் பாவுற்றலர் செந்தமிழன் சொல்வளப் பதிகத் தொடை பாடிய பான்மையி னால் நாவுக்கரசென்று உலகேழி னும் நன்னாமம் நயப்புற மன் னுக என்று தடங்கருணைப் பெருங்கடலாம் இறைவனே நாவுக்கரசு என்ற நற்பெயரை வழங்கியருளிய பேறு பெற்றவர் நாவுக்கரசர் ஆவார். வாக்குக்கு ஈசர் - வாகீசர் பெற்ற பெருந் தகையார் மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விரவுச் சிவசின்னம் விளங்கிடக்கையில் திகழும் உழ வாரப் பெரும் படையுடன் திருத் தொண்டாற்றும் பெருவிருப் புடையவராய்த் திகழ்ந்தார். இவ்வாறு உள்ளத்தாலும் உட லாலும் இறைவனுக்கும் மக் களுக்கும் ஒரு சேரப்பணிபுரிந்த உயர்குணத்து நல்லோராய் ஒளிர்ந்தவர் நாவுக்கரசராவர்.

இறைவனின் இனிய பண்பு களை எவரும் இலகுவில் அறிந்து அவனடிகளைப் போற்றும் வண் ணம் நெறிப்படுத்துவதில் நாவுக் கரசர் முன்னிற்கிறார் அவரது திருப்பாடலைக் காண்போம்

ஆன்மீகமில்லாத சடங்குகள் சுயநலத்தை நீக்க உதவாது.

திருவே என்செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி மிக்க
உருவே என் உறவே என் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோய் — அடையாவண்ணம்
ஆவடு தண் துறையுறையும் அமரர் ஏறே ''

திருநாவுக்கரசர் பெருமான் இவ்வாறு இறைவனின் பண்பு நலன்களைப் பறைசாற்றிவிட்டு அவனுடைய படைப்பில் உலக உயிர்கள் அனைத்தும் சமம் என்ற சிறந்த நற்கருத்தை எடுத்து நவில்கின்றார். இறைவனுடைய அடியார்கள் என்றால் அவர்கள் அனைவரும் சமம் அவர்களுக்கிடையே பிறப்பினாற் பேதம் என்று கூறிப்பிரித்துப் பேசுவது பேதைமை. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்பது தமிழ்மறை. அவ்வகையில் கணக்கிலாச் செல்வத்திற்கு அதிபதியாக இருந்தாலும் கூட அவர்கள் இறைநெறியை மதிக்காத, போற்றாத உள்ளமுடையோராய் இருப்பாரேயானால் அவர்களை ஒருபோதும் மதியோம் என்றார். அதே நேரத்தில் அங்கங்கள் எல்லாம் அவ்வுடம்பைப் பற்றியுள்ள தொழு நோய் காரணமாக அழுகியிருந்து மேலும் அவர் பசுவினைக் கொன்று ஊனினைத்தின்று வாழும் கருணையற்ற கொடுமை மிக்க வாழ்வு நடாத்தும் கீழ் சாதியென வழங்கும் புலையரே யாயினும் அவர் ஈசனுடைய அடியவராய் அவன் நெறி நிற்கும் நல்ல மனத்தராய் விளங்கினால் அவரே யாம் வணங்கும் கடவுளர் என்று ஆண்டவன் அருள் நெறி பின்பற்றும் புலையரையும் உயர்த்திப்பேசக்காணலாம். பாடல் பின்வருமாறு:

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளரே.

எல்லோரும் சமம் என்ற இந்தக்கருத்தையே மேலும் சற்று வன்மையாகவே பிறிதொரு பாடலிற் கூறியுள்ளார்.

துடிப்பான எண்ணம் சோகசீதம் பாடாது.

" சாத்திரம் பல பேசும் சமுக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்
பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருமாற் பேறரே "

இவ்வாறு குலம் நிறைவானவர்கள் அடுத்துச் செய்யத்தக்கது என்ன என்பது குறித்தும் நாவுக்கரசர் பெருமான் நலமுற நவில்கின்றார். நாவுக்கரசர் பிறருக்கு உதவும் பெருமனம் படைத்த வேளாளர் குடியிற் பிறந்து பலருக்குப்பயன்படும் பயன்மரமான வாழ்வு வாழ்ந்தவர் உழவர் குடிப் பெருமகனாகப் பிறந்து உழவாரப் பணியே தம் இடையறாத உயர் பணியாகக் கொண்டொழுகிய உத்தமராகிய அவர் உலக மக்கள் இறையருளை எய்தப் பெற்றுச் சிவகதி சேர எளிய வழி எதுவென்றும் தேர்ந்து தெரிவிக்கின்றார். சிவகதி அதாவது சிவனருள், இறையருள் என்னும் நெற்கதிர்களை நிறையப் பெறவேண்டுமானால் 'மெய்மை' என்ற உழவை மேற்கொள்ள வேண்டும்.

நிலம் உழப்பட்ட பின்னர், அந் நிலத்தில் அன்பு என்னும் அரிய விதையை விதைக்க வேண்டும். அவ்வயலில் வித்து முளை கிளம்பிப் பயிர் முகம்காணும் அளவையில் அவற்றோடு பொய்மை என்னும் களையும் விளையலாம். அப்பொய்ம்மை என்னும் களையினை வேரோடு களையவேண்டும். பின்னர் பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சித் தகுதி என்னும் நல்ல பண்பாகிய வேலியைக் காவலாகப் போடவேண்டும். நல்ல வழியிலே நடத்தலாகிய செம்மை என்னும் நெறியிலே நீங்காது நிற்கவேண்டும். இவ்வாறு நின்றால் சிவகதி என்னும் தானிய மணிக்கதிரைத் தடையின்றிப் பெறலாம் என்கிறார்; சால்பிற்குக் கட்டளையாகி நெறிநின்ற தூயோராம் திருநாவுக்கரசர் பெருமான்.

மெய்மையாம் உழவைச்செய்து
விருப்பெனும் வித்தை வித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற்
சிவகதி விளையும் அன்றே.

நல்லெண்ணம் நற்செய்கையை உருவாக்கும்.

இவ்வாறு திருநாவுக்கரசர் பெருமான் உலக உயிர்கள் உய்யும் நெறியில் ஒழுகும் நல்லாற்றினைத் திறம்படக் கூறியுள்ளார். நாயன்மாரில் நீண்ட காலம் வாழ்ந்து நல்வழி காட்டிய பெருந்தகை திருநாவுக்கரசர் பெருமான்தான் என்பதையும் சைவ உலகம் மறக்க முடியாது.

கடவுளுடைய திருநாமத்தை நாம் மனதாரத் திரும்பத் திரும்பச் சொல்லுவது நமக்கு நல்ல பலனைக் கொடுக்கும். அது நமது பாவங்களின் தீய பலனையும் மாற்றி விடும். திரும்பத் திரும்ப நாம் கடவுளின் திருநாமத்தைச் சொல்லியபடி எதையும் செய்யும் போது நம்முடைய முயற்சியை இறைவனுக்கே அர்ப்பணிக்கிறோம். அதனால் தீய விளைவுகள் ஏற்படவே முடியாது. அர்த்தமே புரியாமல் கடவுள் பெயரைச் சொன்னாலும் கூட அதற்கு நல்ல பலன் உண்டு. ராமனின் நாமத்தை தலை கீழாகச் சொன்ன வால்மீகிக்கு உலகம் புகழும் முனிவராகும் உன்னத பதவி கிடைத்தது. எங்கேயிருந்தாலும் ஊதுவத்தி எரியும் போது அதன் மணம் நம்மை எட்டி விடும். அதே போல் நாம் எங்கே என்ன வேலையைச் செய்து கொண்டிருந்தாலும், மனம் இறைவனை நினைக்கும் போது அதன் பலன் நமக்குக் கிட்டிவிடும்.

அடியார்கள், பெரியவர்கள் வாழ் நாளில் இறைவனை நினைக்காமலே இருந்திருந்தும் பிற்காலத்தில் இறை உணர்வு பெற்று முத்தி அடைந்திருக்கிறார்கள். நாம் நமது குழந்தைகளுக்கு கடவுளின் பெயரைச்சூட்டி அழைக்கும் போது இறை நாமத்தைச் சொன்ன பலன் நமக்கு ஏதோ ஒரு விதத்தில் கிடைத்து விடும்.

எனவே இறைவனை நினைப்பதோடு அவனுடைய திருநாமத்தை மனதாரச் சொல்லுவதோடு திரும்பத் திரும்ப எழுத முயற்சிக்க வேண்டும். அப்போது நமது மனம் இறை உணர்வோடு ஒன்றிவிடும். அதன் பலன் நமக்கு பூரணமாக கிடைத்து விடும். இதுசர்வ நிச்சயம்.

யாழ்ப்பாணம்

# தொண்டைமானாறு — செல்வச்சந்நிதி சுப்பிரமணிய சுவாமி

## நிந்தாஸ் துதி.

அல்வாயூர் கவிஞர் மூ. செல்லையா

### விநாயக வணக்கம்

வெண்பா

பெருகும் திருவருள்போற் பேராநீர்க் கேணி
அருகமரு மானைமுகத் தையன் — மருமலர்ந்தாள்
சிந்தை பணிந்து செல்வச் சந்நிதிவாழ் சேய்மீது
நிந்தாஸ் துதியுரைக்க நேர்.

### நிந்தாஸ் துதி

பொன்னமருந் தொண்டை மானாற்றிற் பொலிந்த செல்வச்
சந்நிதியில் மேவுந்த யாநிதியே — நின்னப்பன்
எப்பொழுதும் நட்டமுற எம்மவர்க்கி லாபம்நீ
தப்பாது செய்குவையோ தான் 1.

நங்கையர்க்கு நான்குவிழி நாதனுக்கீ ராறுவிழி
தங்குமயிற் காயிரங்கண் தானமைந்தும் — எங்குறைகள்
கண்டொழிக்க வன்மையிலாக் கந்தாநின் சந்நிதிசேர்
தொண்டருக்கி யாதோ சுகம். 2.

வாழும் பதிசெல்வச் சந்நிதியாய் மன்னுமன்பர்
ஆளும் பெயர்செட்டி என்றமைந்திம் — நாளுமுனை
வாழ்த்து மடியார் வறுமையுறக் காரணமென்
சூழ்ந்தமங்கை மார்தடையோ சொல். 3.

( சூழ்ந்த என்பதன் விகாரம் )

சட்டியிலே நொக்கவித்துச் சாறாக்கி நீ தரலால்
பெட்டியிலே அன்னம் பெருகினதென் — திட்டமுடன்
சிந்தைகளித் தார்வறியார் சேர்ந்துபுசித் தாரடியார்
முந்துந் துலாமதியில் முன். 4.

பண்பில்லாத இடத்தில் சுதந்திரம் இருக்க முடியாது.

கந்தசட்டி நாளிலே ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கப்படுவது வழக்கம்.

ஓங்குங் கடைமகனாய் உன்தந்தைக் கோதுவித்து
வீங்குசிறை நான்முகனை நீவிடுத்த — தீங்கையெண்ணிப்
பெண்தருவா ரின்றியோ பேசுமும்பர் யானையொடு
மண்தருமா னைமணந்தாய் மன். 5.

செட்டியெனும் பேருடை நீ செல்வர்களே உன்பாதங்
கிட்டி யுரைப்பவற்றைக் கேட்பதன்றி — எட்டிநின்றே
ஏழை உரைப்பதனை ஏற்காயென் றெண்ணாமல்
நாளைவீ ணாக்கினனே நான். 6.

அஞ்சுதலை நானுடையேன் ஆறுதலை நீயளித்தால்
விஞ்சுதலைப் பாரமெனை மேவாதோ துஞ்சுதலை
விட்டளிகள் மூசுமலர் மேவுசெல்வச் சந்நிதியில்
இட்டசித்தி ஈஎந்தை யே. 7.

பன்னிருகைச் செல்வன் நீ பாழும் பிணிவருத்தும்
என்னொருதைத் துன்பத்தை யெண்ணாயேல் — சந்நிதிவாழ்
கந்தா அபய வரதக் கரமுடைய
மைந்தா எனல்வீண் மதி. 8.

அக்கினியி லேயுருவாம் ஆனவுன்றன் மேனியிலே
இக்குறிக ரரன்பால் இறைத்தாலும் — மிக்கஅனல்
ஆறிநெஞ்சு நீகுளிராய் ஆனதினால் என்துயரம்
மாறமனம் கொள்ளாய் மதி. 9.

வன்மைமிகு சூர்முதலை வாட்டிய நீ கானம்வாழ்
மென்மைமிகு வள்ளிக்குத் தோற்றதுமேன் உன்னிடத்தில்
நம்பிக்கை கொள்ளவொரு ஞாயமுண்டோ சந்நிதிவாழ்
தும்பிக்கை யான்தம்பி சொல். 10.

ஈழகேசரி 16 - 09 - 1951

உ
சிவமயம்

# சைவத்திருமுறைகள்

ஆய்வாளர் கனக. நாகேஸ்வரன் M. A.

சோழப் பெருமன்னர்களது ஆட்சிக்காலத்திலே சைவ சமயம் உன்னத வளர்ச்சி பெற்றது. அருண்மொழி வர்மனாகிய முதலாம் இராஜராஜனின் முயற்சிகளின் பயனாகவே தேவார திருவாசகங்கள் இன்று எமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றை அவனே பன்னிரு திருமுறைகளாகத் தொகுப்பித்தான். தேவாரம் பண்ணோடு பாடப்படுவது அவற்றிற்குப் பண் அமைப்பித்த பெருமையும் அவனுக்குரியது.

தென்னகத்துக் கட்டடக் கலையின் சிகரமாக விளங்கும் தஞ்சைப் பெருவுடையார் கோயில்சிவபாதசேகரனால்ஈடும் எடுப்புமற்ற வகையில்நிர்மாணிக்கப்பட்டது. கலைவனப்பில் அது நிகரற்ற படைப்பாகும். சைவ சமய தத்துவங்களையும் வழிபாட்டு மரபுகளையும் ஆலய ஏற்பாடுகளையும் முழுமையாகப் பிரதிபலிக்கும் பான்மையில் இதன் கட்டடச்சிற்ப அமைப்புக்களும் அதிலே வரையப்பட்டுள்ள சிலாசாசனங்களும் விளங்குகின்றன. ஆலயங்களிலே திருமுறைகளை ஓதுவதற்கு ஓதுவார்களையும் வழிபாட்டில் உபசாரமாக ஆடல், பாடல் புரிவதற்கு நாட்டியப் பெண்களையும் நியமித்தார்கள் இவற்றிற்கென மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சோழர் காலத்தில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியன தோன்றின. சேந்தனார், கருவூர்த்தேவர், திருமாளிகைத்தேவர், பட்டினத்தார் ஆகியோரது பாடல்கள் பக்திச் சுவையும் தத்துவச் சிந்தனைகளும் செறிந்தனவாக இருந்தன. பன்னிரண்டாம் நூற்றாண்டிலே அநபாயன் காலத்திலே சேக்கிழார் பாடிய பெரிய புராணம் சைவசமயத்தின் வரலாற்றையும் தத்துவங்களையும் மக்கள் வாழ்க்கையோடும் இயற்கை நெறியோடும் இணைத்துக் கூறும தனிச்சிறப்புடைய நூலாகும்.

இராஜராஜன் தில்லைக்குச் சென்று அரும்பாடுபட்டு, கிடையில் கிடந்த தேவாரங்களைப் பெற்று நம்பியாண்டார் நம்பி மூலம் அவற்றைத் திருமுறை

களாக முறையாகத் தொகுப்பித்தான். அத்தோடு கோயில்களில் அவற்றை முறையாகப் பக்க வாத்தியங்கள் சகிதம் பண்ணுடன் பாட ஓதுவார்களையும் நியமித்தான். இங்ஙனம் சைவத்துக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது.

நாம் தேவாரம் பாடுமுன்னரும் பாடிய பின்பும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லுகிறோம். இதற்குக் காரணம் சைவமக்களுக்குத் 'திருச்சிற்றம்பலம்' அதாவது தில்லைச்சிதம்பரமே முதன்மையான கோயில் என்பதாகும். இங்குதான் தேவாரங்கள் இராஜராஜனால் மீட்டெடுக்கப்பட்டன. ஆகவே நாம் 'திருச்சிற்றம்பலம்' எனும்போது ஸ்தலம் மூர்த்தி தேவாரம்பாடிய அருளாளர்கள், இராஜராஜன் எல்லோரையும் நினைவு கூருகிறோம். எமது உள்ளத்தில் எழும் நன்றிப்பெருக்கே பக்தியுணர்வே நாம் சைவத்திற்குச் செய்யும் பெருந்தொண்டாகும். எல்லோரதும் உள்ளத்திலும் எழும் இவ்வுணர்ச்சி சைவத்தை நிலை நாட்டும் சக்தியாக விளங்கும்.

சோழப்பெருமன்னன் இராஜராஜன் தம்மிடம் வரும் ஓதுவார் மூர்த்திகள் மூவர் அருளிய தேவாரங்களிற் சிலவற்றை ஓதக்கேட்டு மனமுருகி நின்றான். பாடல்களின் இனிமை, சொற்செறிவு, ஆத்மிக உணர்வு ஆகியவற்றாற் கவரப்பட்டதால் தேவாரப் பாடல்கள் முழுவதையும் பெற எண்ணினான். அம்முயற்சி பலிக்காததையிட்டு மனம் வருந்தினான். திருநாரையூரிலுள்ள நம்பியாண்டார் நம்பி என்னும் அந்தணச் சிறுவன் மூலமாகத் தேவார ஏடுகள் தில்லையில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதை இராஜராஜன் அறிந்தான். இவ்வரலாற்றினை உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த திருமுறைகண்ட புராணம் பின்வருமாறு கூறும்.

"வார்ந் தருட் கண்ணீர் சொரிய நம்பி கேட்ப
வண்டமிழ்கள் இருந்த இடம் மன்றுளாடும்
கூர்ந்த இருட்கண்டர் புறக்கடையின்
பாங்கர்க் கோல மலர்க்கைகள் அடையாளமாகச் சார்ந்தன"

அரசன் நம்பியாண்டார் நம்பியுடன் தில்லைக்குச் சென்று அங்குள்ள தில்லை மூவாயிரவரைத் தேவார ஏடுகளைத் தருமாறு வேண்டினான். ஆனால், அவர்களோ தேவாரம் அருளிச் செய்த மூவரும் வந்தாலன்றிக் கதவு திறக்காது எனக் கூறினர். பின் ஒருவாறுதேறி என்ன செய்யலாம் எனச் சிந்தித்தான்.

அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.

''அரசனும் மெய்த்தகுசீர் அம்பலவர்க்கு உற்ற செல்வவிழா எடுத்து
விளம்பு தமிழ்மூவர் தம்மை உய்த்து அணிவீதியின்
உலா வருவித்து உம்பர் நாயகன் தன் கோயில் வளமாக்கி
உள்ளே சித்தமெலாம் உருக்கு தமிழிருக்கை சேரச்சேர்த்தி
அவர் சேர்ந்ததெனச் செப்பிநின்றான்''

இதன்பொருள்.

''ஸ்ரீ நடராஜருக்கு விழா எடுப்பித்து மூவர்
திருமேனியையும் உருவாக்கி விழாவில் அம்
மூவரையும் வீதிவலஞ் செய்வித்து அந்தணர்களைத்
திருப்தியடையச் செய்தான்.

இவ்வாறு அரசன் மதியூகத்துடன் அச்செயலைச் செய்தான் என்பதைத் திருமுறைகண்ட புராணத்தின் மூலம் அறிய முடிகிறது. பின்னர் கோயில் அர்ச்சகர்கள் காட்டியவாறு நோக்க, அறை தானாகத் திறந்து கொண்டது. அப்போது அறையினுள் அரசன் கண்டது அவனை அதிர்ச்சியுற வைத்தது. ஏடுகள் கறையானாற் சேதமடைந்திருந்தன.

''பொய்யுடையோர் அறிவுதனைப் புலன்கள் மூடும்
பொற்பதுபோல் போதமிகும் பாடல் தன்னை
நொய்ய சிறு வன்மீக(ம்) மூடக் கண்டு
நொடிப்பளவிற் சிந்தை நொந்தான் வேந்தன்''

என்பது திருமுறைகண்ட புராணம். ஏடுகளைத் தைலமிட்டுத் துப்புரவாக்கிய போது பல ஏடுகள் அழிந்திருப்பதைக் கண்டமன்னன் கவலையடைந்தான். அப்போது, ''இக் காலத்துக்குகந்தவை அழியாமல் இருக்கின்றன'' என ஓர் அசரீரிவாக்குக் கேட்டது அரசன் கவலை நீங்கி அடியார்களுக்குத்தானதருமங்கள் செய்வித்தான். நம்பியாண்டார் நம்பியும் அரசன் வேண்டியதற்கு இணங்க ஏடுகளை வகைப்படுத்தினார்.

திருஞானசம்பந்தர் அருளிச் செய்த 384 திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடிய 313 பதிகங்களை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளியதை ஏழாம் திருமுறையாகவும், திருவாசகத்தை எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலரின் திருமந்திரத்தை 10 ஆம் திருமுறை

யாகவும், பின்னர் இறைவனால் அருளிச்செய்யப்பட்ட திருமுகப் பாசுரம் முதலாக நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றையுங் கபிலதேவர், நக்கீரர், சேரமான் பெருமாள் நாயனார் பட்டினத்தடிகள் ஆகியோர் பாடல்களையுஞ் சேர்த்துப் பதினொரு திருமுறைகளாக வகுத்தார் நம்பியாண்டார் நம்பி. இன்று திருமுறைகள் பன்னிரண்டு என்பர். முதல் ஏழு திருமுறைகளான தேவாரங்களுக்குப் பண் அமைத்தல் பற்றிய கேள்வி எழுந்த போது நம்பியாண்டார் நம்பி திருவெருக்கத்தம்புலியூரில் இறைவனை வேண்டி நின்றார்.

''நல்லிசை யாழ்ப்பாணர் நன்மரபின் வழிவந்த
வல்லியொருத்திக் கிசைகள் வாய்ப்பளித்தோம்''

என அசரீரி வாக்குக் கேட்டது. மன்னன் அப்பெண்ணை அழைப்பித்து வேண்ட அவளும் ''சுருதி வழிப்பண் தழுவும் நல்லிசையின் வழிகேட்டு யாவரும் மகிழ்ந்தார்கள்'' தில்லையம்பலத்திலே அந்தணர்கள் மன்னர் நம்பி மற்றும் அங்கிருந்தோர் அனைவரும் கேட்கும் படியாக அப்பெண் தில்லைக்கூத்தன் திருவருளால் ''பண்'' வகுத்துக் கொடுத்தாள் என அறிகிறோம்.

''சொன்ன நட்டபாடைக்குத் தொகை எட்டுக்கட்டளையாம்
இன்னிசையால் தகுந்தக்க ராகத்திற்கு ஏழு கட்டளையாம்
பன்னு பழந்தக்கராகம் பண்ணின் மூன்றுளதாம்
உன்னரிய தக்கேசிக்கு ஓரிரண்டு வருவித்தார்''

இங்ஙனம் மற்றைய பண்களுக்கும் கட்டளைகள் வகுக்கப்பட்டன.

இராஜராஜன் தேவார ஏடுகளை மீட்டதுடன் நின்றுவிடவில்லை. அவற்றைத் திருமுறைகளாக வகுப்பித்தும் பண்ணடைவு செய்வித்தும் தேவாரங்களைக் காத்துள்ளான். சைவக் கோயில்கள் எங்கணும் தேவாரப் பண்கள் பாடப்பட வேண்டும் என்றும் கட்டளை பிறபித்தான். தஞ்சைப் பெரிய கோயிலில் ஓதுவார் நாற்பத்தொன்பது பேரையும் மத்தளம் வாசிப்போர் இருவரையும் நியமித்தான் அவர்களுக்கு நெல் விளையும் நிலங்களும், வசிக்க வீடுகளும் பசுமாடுகளும் ஈந்தான் எனச் சாசனங்கள் கூறுகின்றன.

தேவாரங்களைச் சாரங்கி, கொக்கரி போன்ற பக்கவாத்தியங்களுடன் பாடச் செய்தான். இவனது ஊக்கம் சோழநாட்டி

தர்மம் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தாதே.

லுள்ள கோயில்கள் எங்கும் பரவியது மேலும் சைவசமய குரவர்களான திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் ஆகியோருடைய திருமேனிகளைச் செப்பினால் ஆக்கி அவர்களது குருபூசைகளும் நடாத்தினாரென வும் இம் முன்மாதிரியைப் பிற சைவாலயங்களும் பின்பற்றின எனவும் அறியமுடிகிறது. இச்சந்தர்ப்பத்தில் அக்காலப் பண்களையும் இக்காலத்து இராகங்களையும் கவனத்திற் கொள்வோம்.

[தொடரும்........

## அருஞ்சுடரே! நீ வருகவே

தண்டமிழோங்கிவளர்
தொண்டைமா னாற்றயலிற்
சந்நிதி முருக வருக
சாந்தி பெற அடியார்கள்
ஏத்தியே போற்றிடும்
தனிவடி, வேல் வருகவே
பண்டைய முறைப்படி
சந்நிதிப் பேரவை
சாற்றும் வடிவேற் பெயரிலே
சான்றாகத் திங்கள் தொறும்
வெளியிடும் ஞானச்சுடர்
சமய, கலை, சுமந்து வந்தே
எண்டிசையும் போற்றவே
எதிரின்றி நான்காண்டு
இனித்திடமெல்ல நடந்தே
இளைஞர் முதல் முதியோர் வரை
யாவரு மன நிறைய
ஏற்றமா அறிவுதந்தாய்
அண்டரும் போற்றவே
ஐந்தாண்டு தொடங்கிட
அடியெடுத்தாய் மகிழ்ந்தோம்
அதுபோல் மென்மேலும்
சந்நிதியான் துணைக்கொண்டு
அருஞ்சுடரே நீ வருகவே.

முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம்

உ

# வாழ்த்துப்பா

## அகவை ஐந்தினில் ஞானச்சுடர்

— ஆ. கதிர்காமத்தம்பி —

ஒளிமிளிரும் சந்நிதிவேல் உறுதுணையால் ஆச்சிரமம்
அழிபசியை ஆற்றிவர அடியாரறிவுப் பசிதீர்
களிப்புடனே கலைபண்பாட் டுப்பேரவை நடாத்திவர
மிளிரும்ஞான னச்சுடரே மேன்மையாய் ஓங்குகவே

முதலாமாண் டிற்றவழும் மோனமுணர் குழந்தையாய்
இதமுடனே அடியார்கள் இருகரத்தில் ஏந்திடவே
அறமுரைத்தாய் அகமகிழ்ந்து அரவணைத்த அன்பரினாற்
சிறப்படைஞா னச்சுடரே! தினகரன்போல் விளங்குகவே

அகவையிரண் டில்அறிஞர் அளித்திட்ட உரத்தினாலே
மிகவளர்ந்து சிவகுமாரன் விநாயகன் வழிபாடுகள்
தகுதியான அறிஞரது தகைமைகள் உணரவைத்த
செகம்புகழ்ஞா னச்சுடரே! தினகரன்போல் விளங்குகவே

துறவுணர்த்தும் குருபூசைகள் தூயதாகுந் திருவாசகம்
அறமுணர்த்தும் நான்குயுகம் அறவாழ்வு பாரதத்தின்
இறமுணர்த்தும் கோட்பாடுகள் தேர்வுதரும் ஆங்கிலமும்
சிறப்புணரச் செய்சுடரே தினகரன்போல் விளங்குகவே

அகவைமூன்றில் அன்பர்கள் அளித்திட்ட ஆக்கங்கள்
மிகுசைவ வழிபாடு விரதங்கள் இறைவணக்கம்
அகத்திருள்ஓட் டும்முருகன் ஆதியாகுஞ் சமயநெறி
மிகத்தெளிவாய் உரைசுடரே! தினகரன்போல் மிளிருகவே

முருகமந்தி ரம்குறழ முதம்கந்த புராணமுடன்
விரும்புசெல்வச் சந்நிதித்தலபுராணம் பாரதநூல்
திருத்தொண்டர் அந்தாதிச் சிறப்புக்களும் உணரவைத்தாய்
அருஞானச் சுடரமுதே! அருக்கனைப்போல் விளங்குகவே

மாண்டவியர் முருகேசு மன்னுபுகழ் ரமணரிஷி
மாண்புமிகும் ராமக்கி ருஷ்ணருரை சண்முகதாஸ்
ஆன்மயோகி சபாரத்தி னமாதியோரின் மகிமைகளைத்
தேன்போலு ரைசுடரே! தினகரன்போல் விளங்குகவே

நான்காமாண் டிற்புகுந்தே நல்லறிஞர் தொடருரையும்
மூன்றாமாண் டிற்தொடரும் விழாக்களும் முருகமூர்த்தம்
பாங்கான முருகதலம் பதியாகுஞ் சிவனாதி
மாண்புரைஞா னச்சுடரே! வான்ரவிபோல் விளங்குகவே

சமயநெறி சமூகநெறி சான்றோரின் சிறப்பியல்பு
சமயவிழா விரதநெறி தத்துவஞ்சேர் வார்த்தைகள்
சமய நூல்கள் சந்நிதியான் பெருமைகள் துலக்கிடலால்
நமதன்பின் நற்சுடரே ஞாயிறுபோல் விளங்குகவே

ஐந்தாவது வயதினிலே அகிலமெலாம் பரந்துசென்று
இந்துசமய நெறிதனிலே இசைவதாகுஞ் சைவநெறி
சந்நிதியான் பெருமைகள் சகமெங்கும் பரப்பிடவே
நம்தமிழ்ஞா னச்சுடரே! ஞாயிறுபோல் விளங்குகவே

வீட்டிலாயினும் வேலைத் தலத்திலாயினும் நீ என்ன செய்ய முயன்றாலும் முதலில் இறைவனை வணங்கி, உன்னை முற்றாக ஒப்படைத்து விட்டு வேலையைத் தொடங்கு.

எந்த வேலையைச் செய்தாலும் முற்றாக முழுமனத்தோடு நேர்மையாக உன் வேலையைச் செய், நேர்மை உடனடியாகப் பயன் தராவிட்டாலும் நாளடைவில் பயன் தரும். ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளில் ஈடுபடாமல், ஒவ்வொன்றாக இரண்டையும் நிதானமாகச் செய். ஒரு கல்லால் இரு பறவைகளை விழுத்தப் போனால் ஒரு பறவையும் விழமாட்டாது.

நீ வேலை செய்யும் தொழிலகத்தின் புகழையும் தரத்தையும் பெருமையையும் கெடுத்துவிடாமல் உன்னால் முடிந்த அளவு மனச்சாட்சிக்குப் பிழையில்லாமல் வேலை செய். மிகக்குறைந்த செலவில் மிகக்கூடிய பயன் பெறக்கூடியதாக நீ வேலை செய்தல் வேண்டும் என்பதை உன் கோட்பாடாகக் கொண்டுநட.

பொன்னிலும் பார்க்க பொழுது மிகவும் பெரியது.

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# அஞ்ஞாத வாசம்

() சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் ()

பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் பல இன்னல்களுக்கு மத்தியில் வனவாசத்தை முடித்தனர். அடுத்து வரும் அஞ்ஞாதவாச காலமாகிய ஒரு வருடத்தை எவ்வாறு ஒருவரும் அடையாளம் அறியா வண்ணம் வாழ்வது என்பது பற்றிக் கூடிச் சிந்திக்கலாயினர். தருமர் எல்லோரும் எப்படி உருமாறி வாழ்வீர்களென ஒவ்வொருவரையும் கேட்கலானார். '' துரியோதனன் அறியாத வகையில் அவனுக்குப் பகைமையுள்ள ஒரு நாட்டினை நாம் தெரிந்தெடுத்து அந்நாட்டில் நாம் வாழ்வதே பொருத்தமானது ' என்றும் கூறலானார் அத்துடன் தான் வேத பாண்டித்தியம் மிக்கவரான அந்தணரூபம் கொண்டு வாழ நினைப்பதாகவும் கூறலானார். தருமரின் உரைகளைச் செவிமடுத்த வண்ணம் இருந்த அர்ச்சுனன் 'அரசே தர்மதேவதை எமக்களித்துள்ள வரத்தின் படி எமது அஞ்ஞாத வாசம் எதுவித இடையூறுமின்றி இனிதே முடிவடையும். அஞ்ஞாத வாசமுடிவு எமக்குப் பெரும் நன்மையையே அளிக்கும் இதில் நாம் சஞ்சலப்படுவதற்கு எதுவுமில்லை. அன்றியும் அஞ்ஞாத வாசம் செய்வதற்குரிய நாடுகள் பலவுண்டு. பாஞ்சாலம், மச்சம், சேதி, கலிங்கம், அவந்தி முதலிய தேசங்களுள் ஒன்றை நாம் தெரிவு செய்து வாழலாம்'' என்றும் கூறலானான். இவ்வுரைகளைச் செவிமடுத்த தருமர், '' சோதரரே, விராடமன்னன் மச்சதேசத்தை ஆள்பவன். மிகவும் நற்பண்புள்ளவன். நல்லோர்களை ஆதரித்து அறவழி நடப்பவன். அன்றியும் வயதில் முதிர்ந்தவன்.அவனின் நற்பண்புகள் எமக்கு அநுகூலமாக அமையும். எனவே, நாம் விராடதேசத்திற்கே செல்வது நன்று இனி

நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு உருமாறிச் செல்வீர்கள் எனக் கூறுங்கள் '' என்று கேட்கலானார். தருமரின் உரைகளைச் செவிமடுத்த பீமன் '' அரசே! யான் வல்லபன் எனும் பெயருடன் சமையல் வேலை செய்வேன். பட்சணங்களையும் உண்டிகளையும் அதி அற்புதமாகச் சமையல் செய்து மன்னரை மகிழ்விப்பேன் '' என்று கூறலானான். பின்னர் அர்ச்சுனன் '' அரசே யான் பெண்ணுருக் கொண்டு, நாட்டியம் முதலியவற்றை அரசவைப் பெண்களுக்குக் கற்றுக் கொடுப்பேன். ஊர்வசியின் சாபம் எனக்கு இப்பொழுது உதவி செய்யும்'' என்று இயம்பலானான்.

பின்னர், நகுலன் தனது உருமாற்றத்தை விபரிக்கலானான். '' அரசே தாமக்கிரந்தி என்னும் பெயரில் குதிரைகளை மேற்பார்வை செய்பவனாக நான் வாழ்வேன் '' என்று கூறலானான். இதன் பின்னர் சகாதேவன் '' தந்திரிபாலன் என்னும் பெயரில் பசுநிரைகளைப் பாதுகாப்பவனாக வாழப்போகிறேன் '' என்று கூறலானான்.

ஆண்கள் எல்லோரும் தமது நிலைகளைத் தெரிவித்ததும் யுதிஷ்டிரர் திரௌபதியை நோக்கிப் ' பெண்ணே நீ எவ்வாறு வாழப்போகிறாய்' என்று வினாவினார். அப்பொழுது திரௌபதி ' அரசே விராடமன்னனின் அந்தப்புரத்துப் பெண்களுக்கு வண்ணமகளாய்ச் சைரந்தரி என்னும் பெயருடன் வாழ்வேன்' என்று கூறலானாள். இவ்வாறு எல்லோரும் முடிபு செய்து தம்முடன் வனவாச காலத்திற் சேர்ந்திருந்த தௌமிய முனிவரிடம் விடைபெற்றனர். அப்பொழுது, தௌமியர் பாண்டவர்களுக்குப்பல அறிவுரைகளைக் கூறலானார் தௌமிய முனிவர் பாண்டவர்கட்குப் போதித்த அறிவுரைகள் பின்வருமாறு,

1] அரசனின் அநுமதி பெற்றுக்கொண்ட பின்னரே அரசனை நீங்கள் சந்திக்கச் செல்ல வேண்டும்.

2] மன்னன் விரும்பும் பொருட்கள் மீது நீங்கள் விருப்பம் கொள்ளக் கூடாது.

3] மன்னன் வினாவும் பட்சத்திலன்றி நீங்களாக மன்னனுக்கு எந்தப் புத்திமதியும் கூறுதல் கூடாது.

4] மன்னன் இடும் கட்டளைகளை இரவு, பகல் என்று நேரம் கருதாது ஏற்றுச் செயற்பட வேண்டும்

5] மன்னர் அந்தரங்கமாகக் கூறிய விடயங்களை வெளியிடுதல் கூடாது.

ஞானம் என்பது உண்மையின் உற்பத்தி.

6] அரசர் மதித்து நடப்பவர்களை, நீங்களும் மதித்து நடக்க வேண்டும்.

7] மன்னனின் முன்னிலையில் ஆடம்பரமற்ற முறையில் அடக்க மாக உடை தரித்திருக்க வேண்டும்.

8] அரசனின் புதல்வர்கள், அரண்மனைப் பெண்டிருடன் நெருங் கிய நட்பு வைத்திருக்கக்கூடாது.

இவ்வாறு பற்பல அறிவுரைகளை, மன்னர்களாகவிருந்த பாண்டவர்கள் சாதாரண மக்களாக வாழவேண்டுமென்பதற்காகத் தௌமிய முனிவர் எடுத்துக் கூறிப் பாண்டவர்களை விராடமன்னனின் நாட்டிற்குச் செல்ல அநுமதித்தார். மன்னர்கள் சாதாரண மக்களாக வாழும் சூழ்நிலை ஏற்பட்ட போது, தௌமிய முனிவர் தமது அறிவுரைகள் மூலம் பாண்டவர்களைத் தெளிவு பெறச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தௌமிய முனிவரிடம் விடைகொண்ட பாண்டவர்கள் விராட நகரை நோக்கி நீண்டபயணத்தை மேற்கொண்டு அதன் எல்லைப்புறத்தை அடைந்தனர். தமது ஆயுதங்களைக் கொண்டு செல்லும் வேளையில் தம்மை யாரும் அறியும் சூழ்நிலை உருவாகலாம், என்பதைச் சிந்தித்துத் தமது ஆயுதங்களனைத்தையும் மாட்டின் தோலாற் சுற்றிவன்னிமரமொன்றில் மறைவாக வைத்துத் தமது உருவை மாற்றி மாறுவேடம் பூண்டனர். அஞ்ஞாத வாசகாலத்தில் அது முடியும் ஒரு வருடத்துள் யாரும் தம்மை அடையாளம் காணின், பின்பும் வனவாசமும் அஞ்ஞாத வாசமும் மேற்கொள்ள வேண்டி வருமெனும் நிபந்தனையை மனத்திற் கொண்டு, அதற்குத் தக்கவாறு தம்மை நன்றாக உருமாற்றினர்.

அந்தண வேடம் பூண்ட தருமன், பெண்வடிவு கொண்ட அர்ச்சுனன், சமையற்காரனாகக் கோலம் கொண்ட பீமன், குதிரைக்காரனாகிய நகுலன், பசுநிரைகளைக் காப்பவனாகிய சகாதேவன் ஆகிய ஐவரும் விராட மன்னனின் சபையை நோக்கிச் செல்லலாயினர். கங்கனென நாமம் பூண்ட தருமர் சபையை அடைந்து மன்னரை ஆசீர்வதித்து நிற்க, விராட மன்னன் அவரை நோக்கி "நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்? என்னை நாடி வந்த காரணம் யாது?" என வினாவினான். அப்பொழுது தருமர் "மன்னா! நான் வேதங்களைக் கரைகண்ட அந்தணன் எனது பெயர் கங்கன். நான் பாண்டவர்களுள் யுதிஷ்டிரரின் நண்பனாகவிருந்தேன். அவர்களின் வனவாச காலத்தில் அவர்களுடன் கூடவாழ்ந்து, விரத

மொன்றினை மேற்கொண்டு ஒரு ஆண்டுவரை தங்கள் பாற்தங்கும் விருப்புடன் வந்துள்ளேன். ஒரு வருடம் விரதம் பூர்த்தியடைந்ததும் தங்களிடம் இருந்து விடை பெற்றுக் கொள்வேன்'' என்று கூறலானார். பண்பிற் சிறந்தவனாகிய விராடமன்னன் அந்தணரொருவரைப் பரிபாலித்துக் கௌரவிப்பதால் வரும் நன்மையை மனத்திற் கொண்டு அரசவையில் அவரை இருக்க அநுமதியளித்தான். இவ்வாறு பாண்டவர் ஐவரும் விராடமன்னனிடம் சென்று தங்கலாயினர்.

பாஞ்சாலியும் எளிமையான ஆடை அணிகளுடன் விராடமன்னனின் அந்தப் புரத்தை அடைந்து மன்னனின் மனைவியாகிய சுதேட்டினையைக் காணலானாள் திரௌபதியின் பேரழகாற் கவரப்பட்ட அரசி ''பெண்ணே! நீயார்? உன் அழகு அதிஅற்புதமாக இருக்கிறதே'' என்று அதிசயித்து வினாவினாள் அப்பொழுது பாஞ்சாலி ''அம்மா! நான் திரௌபதியின் தோழியாக இருந்தவள். அவள் வனவாசம் சென்றபின் பலநாடுகளுக்கும் சென்று இப்பொழுது தங்களை நாடி வந்துள்ளேன். இவ்விடத்தில் தங்குவதற்கு தாங்கள் அநுமதி அளிக்க வேண்டும்'' என்று வேண்டினாள். திரௌபதியின் அதீத அழகினால் சுதேட்டினை அச்சமடைந்து ''பெண்ணே! உன்னை இங்கே தங்க வைப்பதனால் ஏதாவது விபரீதம் உனக்கு ஏற்படும்என்று அச்சமாக உள்ளது'' என்று பதிலுரைத்தாள். சுதேட்டினையின் பதிலாற் கலக்கமடைந்த திரௌபதி ''அம்மா! நல்லொழுக்கமும் உயர் பண்பும் கொண்ட என்னை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது. தீய சிந்தையுடன் என்னை யாரும் அணுகிடின் என்னைக் காத்து வரும் ஐந்து கந்தர்வர்களிடமிருந்து அவர்கள் தப்பமுடியாது. ஆகவே நீங்கள் அச்சமின்றி என்னை உங்கள் அரண்மனையில் தங்க அநுமதியளியுங்கள்'' என்று பதிலுரைத்தாள். அரசியும் சம்மதமளிக்கவே திரௌபதி வண்ணமகளாய் விராடனது அந்தப் புரத்தில் தங்கலானாள். இவ்வாறு பாண்டவர்களின் அஞ்ஞாதவாசம் தொடங்கலாயிற்று.

[தொடரும்...

---


அறிவு உயர உயர அடக்கம் மிகுதியாக வேண்டும் அடக்கம் அறிவின் மிகுதியைத் தெரிவிக்கின்ற ஓர் அடையாளம். சாரமும், ஈரமும் இல்லாத உலர்ந்த ஓலை சலசல என்று ஒலிக்கின்றது. பச்சோலை ஒலிப்பதில்லை. அன்றியும் வெண்கலமணி அதிகமாக ஒலிக்கும். தங்கமணி ஒலிப்பதில்லை அதனால் பச்சோலைக்கும் தங்கமணிக்கும் பெருமைதானே.

---

உ

# சந்நிதியான்

ந. அரியரத்தினம்



சந்நிதியான் ஆச்சிரமம் அதனுடன் இணைந்த சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆகியவற்றின் செயற்பாடுகள் இன்று சைவ உலகத்தில் ஒரு காத்திரமான இடத்தைப் பெற்றுள்ளது என்பதுஇவற்றுடன் தொடர்புடைய அன்பர்கள் அறிந்த விடயமாகும். மேலும் இச் செயற்பாடுகள் நித்திய அன்னதானம், வாராந்த வெள்ளி நிகழ்வுகள்' மாதாந்த மலர் வெளியீடு, வருடாந்த விழாக்கள் என்று பல் வகைப்பட்டவையாகக் — கால அட்டவணைப்படியும், ஒருசுற்று வட்டப்பாதையிலும் தொடர்ந்தும் செயற்பட்டுச் செல்பவையாகவும் அமைந்துள்ளன.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பது போல, சந்நிதியானைத் தரிசிக்க

○ தொடங்குவது மனிதன், முடிப்பது இறைவன். ○

வருகின்ற அடியவர்களைத் திருப்திப்படுத்துவதையே சந்நிதியான் ஆச்சிரமம் தனது முக்கிய பணியாகக் கருதிச்செயற்பட்டு வருகிறது அத்துடன் அடியவர்கள் என்ற நிலையைக் கடந்து அதற்கு அப்பாலும் சமூகத்திற்கு ஆற்றவேண்டிய பலதொண்டுகளையும் கூட இன்று அது செயற்படுத்தி வருகின்றது.

ஆலயத்துடன் இணைந்து ஆச்சிரமங்கள் மடாலயங்கள் என்பன சமூகத்திற்கு பல்வேறு பங்களிப்புகளைக் காலத்திற்குக் காலம் ஆற்றிவருவதை எமது சமய வரலாறுகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

அத்தகைய பணிகளையே சந்நிதியான் ஆச்சிரமமும் சமூகத்திற்கு ஆற்றிக்கொண்டிருக்கிறது என்று பொதுவாக நோக்கப்படுகிறது. இது உண்மையான கூற்று என்றாலும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் இன்று ஆற்றப்பட்டுவரும் பணிகளும். அந்தப் பணிகள் செயற்படுத்தப்பட்டுச் செல்லுகின்ற விதமும் சாதாரண ஒரு விடயமல்ல என்பதை எம்மால் உணரமுடிகின்றது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் ஒரு தனித்துவமான ஆலயம் அது ஆத்மீக விடயங்களில் மட்டுமன்றி மக்களது வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களுடனும் தொடர்புபட்டதாக விளங்கி வருகின்றது.

புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வோர் அதனை வெள்ளோட்டமாகச் சந்நிதிக்குக் கொண்டு வந்து அங்கே ஆலயத்தின் வாசலுக்கு நேரே அதனை நிறுத்திப் பூசை செய்து அதன் பின்பு நம்பிக்கையுடன் அதனைப் பயன்படுத்தி வருவதை இன்றும் காண்கின்றோம். அதுமட்டுமன்றி நீதிமன்றத்திற்குச் சென்ற சிலவழக்குக்களின் தீர்வுகள் கூடச் சந்நிதியானிடம் வந்து சத்தியம் செய்வதனூடாக முடிவிற்கு வந்துள்ளதையும் நாம் அறிகின்றோம்.

பல்வேறு நோக்கங்களுடன் ஆலயத்திலும் ஆலயச்சூழலிலும் தங்கி இருக்கும் அன்பர்கள், மற்றும் அன்றாடம் சந்நிதியானைத் தரிசிப்பதற்காகக் கூடுகின்ற அடியார் கூட்டம், உற்சவகாலங்களிற் சேருகின்ற பக்தர்கள் கூட்டம் இவ்வாறு கூடுகின்ற அனைத்துத் தரப்பினரதும் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஆலயச் சூழலில் ஐம்பதிற்கு மேற்பட்டமடங்கள் செயற்பட்டு வந்துள்ளன. ஆனால் இன்று, அவை அனைத்தும் அழிவடைந்த நிலையில் ஒரு சில மடங்கள் மட்டுமே செயற்பட்டுக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். அதிலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் மட்டுமே நித்திய அன்னதானப் பணி என்பது இடம்பெற்றுக் கொண்டிருப்பதையும் காண்கின்றோம்.

○ உண்மையான பக்தன் யார் என்று கடவுளுக்குத் தெரியும் ○

ஆலயச்சூழலில் தங்கியிருக்கின்ற ஐம்பதிற்கு மேற்பட்ட அன்பர்களுக்கான நித்திய பசிப்பிணியைப் போக்குதல், வெள்ளிக்கிழமை, கந்தசஷ்டிக்காலம், உற்சவகாலம் என்று விஷேட காலங்களிற் கூடுகின்ற ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அன்னதானம் வழங்குதல் இவை எல்லாம் சாதாரண பணிகள் அல்ல பொறுப்பும், சுமையும் நிறைந்ததும் அதே நேரம் தொண்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும் இவற்றுடன் ஆத்மீகத்துறை, சமூகத் தொண்டு, மாணவர் நலன்... என்று தனது பணிகளைச் சந்நிதியான் ஆச்சிரமம் காலத்தின் தேவையறிந்து விரிவுபடுத்தி வருவது உண்மையில் வியப்பான ஒரு விடயமே.

இத்தகைய பணிகளுக்கென்று சீரான ,முன் திட்டமிடலோ, தேவையான ஆளணிவசதிகளோ போதிய நிதிவசதிகளோ, அறிவு சார்ந்த நிர்வாக அலகோ எதுவுமே பெரிதாக இல்லாது அதே நேரம் எந்தவிதமான குறையுமின்றி இவற்றை எல்லாம் திறம்படச் செயற்படுத்திக் கொண்டிருப்பது பலருக்கு வியப்பளிக்கும் ஒரு விடயமாகவே உள்ளது.

இவை எல்லாம் ஆச்சிரமத்தின் சுவாமிகளினதோ அல்லது பேரவை உறுப்பினர்களினதோ சக்திக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள் அதே நேரம் எங்களால் விளக்கம் கூறமுடியாத செயற்பாடுகள்.

ஆச்சிரமம், பேரவை என்பவற்றின் செயற்பாடுகளில் உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு, தொண்டு ஆகிய அம்சங்கள் விசுவாசமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஏனையவை எல்லாம் எப்படியோ நடந்து முடிகின்றன.

எப்படியோ நடந்து முடிகின்றன என்றால் எப்படி நடந்து முடிகின்றன என்று அதற்கு அப்பாலும் ஒருவர் சிந்திக்க முயற்சிக்கும் பொழுது தான் அது திருவருள்! அதாவது இறை அருள்!! கலியுகக்கந்தனாகிய சந்நிதிவேலவனது திருவருள் என்பது புலப்படும்.

இவ்வாறு கலியுகக்கந்தனது இறை அருள் எமது செயற்பாடுகளுக்குக் கிடைக்கின்றது என்ற உறுதியான நம்பிக்கையுடனேயே ஆச்சிரமத்தின் சுவாமிகள் தனது சக்திக்கு மீறிய ஆனால் தூய்மையான பல பணிகளைக் காலத்திற்கு ஏற்றவாறு விரிவு படுத்திச் செல்வதைக் காண்கின்றோம். அதுமட்டுமன்றி அவ்வாறு ஆரம்பிக்கப்படுகின்ற செயற்பாடுகள் எல்லாம் தங்கு தடையின்றிச் சிறப்பாகச் செயற்படுத்தப்பட்டுச் செல்வதையும் காண்கின்றோம்.

சந்நிதி ஆலயத்தின் தல விருட்சமான பூவரசு மரத்தின்

கிளை சந்நிதியான் ஆச்சிரமத்தின் முற்றத்தில் செழித்து வளர்ந்து நிற்பதை எல்லோரும் காணலாம். இவ்வாறு சந்நிதியானுடைய தலவிருட்சம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வேரூன்றி இருப்பது சந்நிதியானுடைய திருவருட்கடாட்சம் ஆச்சிரமத்திற்குக் கிடைத்துக் கொண்டிருப்பதன் ஒரு வெளிப்பாடேயாகும்.

மேலும் இந்தப் பூவரசு மரத்தின் கிளை ஆச்சிரமத்தில் நாட்டப்பட்ட சம்பவம் கூடச் சந்நிதியானுடைய அனுக்கிரகத்தின் படி நடைபெற்ற ஒரு நிகழ்வென்றே நாம் கருதுகின்றோம்.

1995 - ஆம் ஆண்டு பலாலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சினால் ஆலயத்தின் மேற்கு வீதியிற் காணப்படும் தலவிருட்சம் சேதமாக்கப்பட்டு அதன் கிளைகள் சில முறிந்து விழும் நிலை ஏற்பட்டது. ஆலயத்துடன் தொடர்புடைய பெண் அடியார் ஒருவர் அதனை எடுத்து விறகுத் தேவைக்காகப் பயன்படுத்தலாமா எனச் சிந்தித்த பொழுது ஆலயத் தொண்டு செய்கின்ற ஒரு ஆண் அன்பர் அதனை எரிப்பதென்பது பாவமான காரியம் புனிதமான ஓர் இடத்தில் நாட்டுவது தான் பொருத்தமானது என ஆலோசனை வழங்கினார். அது தான் சரி என உணர்ந்து கொண்ட அந்தப் பெண் அடியார் அதனை எடுத்து வந்து ஆச்சிரமத்தின் சுவாமிகளின் அனுமதியுடன் ஆச்சிரமத்தில் இன்று இருக்குமிடத்தில் நாட்டிச்சென்றார்கள்.

ஆரம்பத்தில் அந்தப் பூவரசு துளிர்விட்டு முளைப்பது போலக் காட்சி தந்தாலும் அதன் புனிதத்திற்கு ஒவ்வாத வகையில் அடியார்கள் அன்னம் அருந்திய பின்னர் கை கழுவுகின்ற செயற்பாட்டை அந்த மரத்தடியில் மேற் கொண்டதனால் அந்த மரத்தின் தளிர்கள் வாடிச்செல்வதைச் சுவாமிகள் அவதானித்தார்கள்.

இதன் பின்பு அந்தப் பூவரசை புனிதமான முறையிற் பேணுவதற்குச் சுவாமிகள் நடவடிக்கை மேற்கொண்டதனால் அது இன்றிருக்கும் நிலையிற் செழித்து வளர்ந்து ஆச்சிரமத்திற்கு எந்நேரமும் பொலிவையும், நிறைவையும் தந்த வண்ணமுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமம், பேரவை என்பவற்றின் செயற்பாடுகளுக்குச் சந்நிதியானின் திருவருள் எந்தளவுக்கு கிருபை செய்கின்றதோ அதேபோன்று மயில் வாகனம் சுவாமிகளின் குருவருளும் எந்த நேரமும் தனக்கு பக்க பலமாகத் தன்னை வழிப்படுத்திக்கொண்டிருப்பதை ஆச்சிரமத்தின் சுவாமிகள் உணர்ந்து கொள்கின்றார்கள்.

கடமைகள் நம்முடையவை நிகழ்ச்சிகள் இறைவனுடையவை.

தீர்க்க முடியாத பிரச்சினைகள், நெருக்கடிகள், மனத்துன்பங்கள் என்பவற்றை எதிர்கொள்ளும் பொழுது சுவாமிகள் பூஜை அறையில் இருந்து சந்நிதியானுடைய திருப்பாதங்களிலும், தனது குருவாகிய மயில்வாகனம் சுவாமிகளின் திருப்பாதங்களிலும் தன்னுடைய பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் ஒப்புவித்து அதன் பின்பு அமைதியாகக் காரியங்களை முன்னெடுத்துச் செல்கின்றார்கள்.

அவ்வாறு செயற்படும் பொழுது அந்தக் காரியங்கள் எல்லாம் நல்லகாரியங்களாக, தெளிவான தீர்வுள்ள விடயங்களாக இடம் பெறுகின்றன.

திருவருளும், குருவருளும் கை கூடும் பொழுது குறை ஏதும் ஏற்பட முடியுமா? அதுவும் சந்நிதியில் ஏற்பட முடியுமா?

திருவருளும் குருவருளும் எல்லோருக்கும் கிடைப்பதாக!

ஓம் முருகா!

## திருவருளால் வாழியவே !

பேருலகம் அனைத்தையும் அருள்விழியால் நோக்கிப்
பிரியமுடன் எப்பொழுதும் காத்தருளுகின்ற
சீருயரும் செல்வச் சந்நிதி செல்வக் குமரன் பாதம்
ஸ்ரீவித்தை ரூபமாய் வெளிவரும் ''ஞானச்சுடர்''
யாருடைய உயிரெனினும் மேன்மை பெறும் வண்ணம்
அளவறியாக் கருணையினால் தன் வயதேயீர்க்க
ஓதரிய நல்லறிவுண்மை ஞானவுணர் வலைகள்
ஒரு சேரத்தன்னுடைய திருவருளால் வாழியவே!

நாடுகின்ற ஒரு பொருளை அடைய முடியாமல்
நம இதயம் பெரிதான ஏமாற்றம் உற்று
வாடுகின்ற போதினிலே, வெறுப் புணர்ச்சி தோன்றி
வளர்ந் தோங்கிச் சினமாகி ஆணவமுண்டாக்கும்
பீடுயர்ந்த வலக்கரத்தில் ஒளிரும் வேல் ஏந்தி
பிடித்திருக்கும் அபயகரத்தால் அழித்துத்
தேடுகின்ற நல்லறிவில் தெளியவருள் நிற்கும்
முருகவேள் ''ஞானச்சுடர்'' சக்தியினைக் காட்டும்.

சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B. A.

## ஸ்ரீ செல்வச்சந்நிதி மாசி மாத விஷேட தினங்கள்

**27-02-2002** - மாசி புதன் மாசி மகம்

உ

# திருவாசகவிழா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த திருவாசக விழா, 28-12-2001 வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. மார்கழிமாத ஞானச்சுடர் வெளியீடும், திருவாசக விழாவும் ஒரே தினத்தில் இடம்பெற்றது ஒரு சிறப்பான அம்சமாக விளங்கியது.

வழமைபோல, ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட அபிஷேகத்தைத் தொடர்ந்து நாயன்மார்களின் உருவப்படங்களும், திருவாசக ஏடுகளும் ஆச்சிரமத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன. நூல் வெளியீட்டைத் தொடர்ந்து, திருவாசக விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

நல்லை ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் விழாவில் கலந்து அருளுரை வழங்கினார்கள். திருவாசகத்தில் இடம் பெற்ற விடயங்கள் எமது ஈடேற்றத்திற்கு எந்தவகையில் உதவக்கூடியது என்பதை மாணவர்கள், தாய்மார்கள், பெரியோர்கள் என்று சபையில் கூடியிருந்த அனைவரும் உணர்ந்து கொள்ளும் வண்ணம் சுவாமிகள் எடுத்துக் காட்டினார்கள்.

ஞானபண்டித சேவாசுரபி வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை அவர்களும், ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் திரு. சி. முருகேசம்பிள்ளை அவர்களும் சிறப்புரை வழங்கினார்கள் திருவாசகத்தில் உள்ள மிகவும் சிறப்பான கருத்துக்கள் பலவற்றை தெரிந்தெடுத்து அவற்றை திரு. சி. முருகேசம்பிள்ளை அவர்கள் சபையினருக்கு எடுத்துக்காட்டி அதன் சிறப்பை எல்லோரும் உணரச் செய்தார்கள்.

திருவாசகத்தைப் பண்ணுடன் ஓதுதல் தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டியின் முடிவுகள் விழாவில் அறிவிக்கப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்கள் திருவாசகத்தைப் பண்ணுடன் மேடையில் ஓதுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

உன் கண்கள்தான் உன் உடலுக்கு விளக்கு.

தொடர்ந்து வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில், சான்றிதழ் பணம் என்பன வழங்கப்பட்டன. பரிசில்களை நல்லை ஆதீன குரு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள். மேலும் வழமை போல போட்டியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் ஊக்குவிப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# பண்ணிசைப் போட்டி

## வெற்றி பெற்ற மாணவர் விபரம்

### ஆண்டு 6 - 7

1ம் இடம் செல்வி கணேசமூர்த்தி கஸ்தூரி
யா / விக்னேஸ்வரக் கல்லூரி

2ம் இடம் செல்வி சிவலோகநாதன் திவ்வியாவந்தி
யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

3ம் இடம் செல்வி நாகமுத்து சங்கவி
யா / விக்னேஸ்வரக் கல்லூரி

### ஆண்டு 8 - 9

1ம் இடம் செல்வன் மனோகரன் பிரஷாந்
யா / உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

2ம் இடம் செல்வி தாரணி ஸ்ரீபாலச்சந்திரன்
யா / இந்து மகளிர் கல்லூரி

3ம் இடம் செல்வி பிருந்தா அறிவழகன்
யா / மெதடிஸ் உயர்தர பெண்கள் கல்லூரி

### ஆண்டு 10 - 11

1ம் இடம் செல்வி நர்சிகா நாகேந்திரன்
யா / மெதடிஸ் உயர்தர பெண்கள் கல்லூரி

2ம் இடம் செல்வி கனகசுவாமி கௌசல்யா
மணியகாரன் தோட்டம், கரணவாய்

3ம் இடம் செல்வி சி. சிவாஜிக்கா
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## ஞானச்சுடர் வாசகர் போட்டியிற் பரிசுபெறுவோர் விபரம் - 2001

முதலாம் இடம் :-

**லோ. கெங்காதரன்**
( வலி-தென்மேற்குப் பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் )

இரண்டாம் இடம் :-

**செல்வி உருத்திராதேவி பரமநாதன்**
( V. T. S லேன் உரும்பிராய் )

மூன்றாம் இடம் :-

**செல்வி ஜீவாஜினி குணராசா**
( அச்சுவேலி தெற்கு அச்சுவேலி )

### ஆறுதற் பரிசுகள் பெறுவோர் விபரம்

**செல்வி ந. சிந்துஜா**
( யா / கட்டைவேலி மெ மி. த க. பாடசாலை கரவெட்டி )

**செல்வி ஜெகநாதன் புஷ்பமலர்**
( மே / பா ஐ. இராசேந்திரம் 525/1 கே. கே. எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம். )

**செல்வி திவ்வியா சிவலிங்கம்**
( 78 கலட்டி அம்மன் வீதி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். )

**இ. சரவணபவன்**
( c/o சிவசுபேசன் அராலி மத்தி, வட்டுக்கோட்டை. )

**திருமதி நந்தினி பரமேஸ்வரன்**
( ஆலடி உடுவில் சுன்னாகம். )

**வை. கனகசுந்தரம்பிள்ளை**
( இராசவீதி தோப்பு - அச்சுவேலி. )

**க. கிருபாகரன்**
( 13, அரசடி ஒழுங்கை தட்டாதெரு வண்ணார்பண்ணை யாழ். )

**த. நிருபன்**
( 465/A சிவலிங்கப்புளியடி K. K. S. வீதி யாழ்ப்பாணம் )

**அ. ஹேமாலக்சுமி**
( பழைய பொலிஸ்நிலைய வீதி வல்வெட்டி, வல்வெட்டித்துறை. )

**பா. சிந்துஜன்**
( முடக்கம் தோட்டம் அல்வாய் தெற்கு, அல்வாய், )

# மாசி மாத வாராந்த நிகழ்வுகள்

01 - 02 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : கவிமணி பண்டிதர் திரு. க. முத்துவேலு

சொற்பொழிவு : " சூர்மா மடியத் தொடு வேலவனே "

வழங்குபவர் : சைவப்புலவர், கவிமணி திரு. இராசையா ஸ்ரீதரன்

---

08 - 02 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : சிவஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள் ( வரணி )

சொற்பொழிவு : " அடியார்கள் வினை தீர்க்கும் வேல் "

வழங்குபவர் : சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் திரு. சி. கா. கமலநாதன் B. A. (Hons)
( முகாமைத்துவ உதவியாளர் )

---

15 - 02 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. பொ. அருந்தவநாதன்
( விரிவுரையாளர் யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை )

சொற்பொழிவு : " கடவுள் வடிவம் "

வழங்குபவர் : திரு. அ. குமாரவேல்
( விரிவுரையாளர், யாழ்/கல்லூரி வட்டுக்கோட்டை )

---

22 - 02 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# மாசி - 2002

வெளியீட்டுரை : திரு. ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
( விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியபயிற்சிக் கலாசாலை )

மதிப்புரை : சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை
( இளைப்பாறிய அதிபர் )

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( *2002* ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

★ *2001* ம் ஆண்டிற்குரிய வாசகர் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டியோரின் பெயர் விபரங்கள் மலரின் உள்ளே பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குரிய பரிசில்கள் மாசிமாத மலர் வெளியீட்டின் போது வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். ★

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு:

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.